**தமிழக அரசின் நிதியமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், 2013–2014 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தை, 2013 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21 ஆம் நாள் சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றும் உரை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

''தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு'' (குறள் 383)

தூங்காமை, கல்வி, துணிவுடைமை ஆகிய இம்மூன்று நற்குணங்களும் நாடாளும் நல்வேந்தரிடத்தில் நீங்காது நிலை பெற்றிருக்க வேண்டும் என்பது வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழி ஆகும். தெய்வப் புலவராம் திருவள்ளுவர் எடுத்துக் கூறும் இந்த மூன்று குணங்களோடு, அஞ்சாத மன உறுதி, விடாமுயற்சி, காலம் தாழ்த்தாத முடிவு, வாரி வழங்கும் வள்ளல் குணம், ஆழ்ந்த அறிவாற்றல் ஆகிய குணநலன்களையும் ஒருங்கே பெற்றுள்ள நமது மாண்புமிகு முதலமைச்சர் **புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா** அவர்கள், தமிழக மக்களின் நல்வாழ்வுக்காக தமது வாழ்க்கையையே அர்ப்பணித்து, தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக, அல்லும் பகலும் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழர் வாழ்வே தம் வாழ்வாகவும், தமிழகத்தின் நலனே தனது இலக்காகவும் கொண்டு, தமிழ்நாட்டை ஆட்சி செய்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் நல்லாசியுடன் 2013–2014 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை இந்த மாமான்றத்தின் முன்வைக்க விழைகின்றேன். பங்கீட்டு நீதியுடன் கூடிய வளர்ச்சியை உருவாக்கும் சூளுரையுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிக்க தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு, மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பை மூன்றாவது முறையாக

ஏற்று, எண்ணிய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான பாதையை வகுத்துக் காட்டும், இந்த அரசின் மூன்றாவது வரவு–செலவுத் திட்டத்தை தாக்கல் செய்யும் பெரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது. கிடைத்தற்கரிய இந்த நல்வாய்ப்பை எனக்கு நல்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. காவேரி நடுவர் மன்றம் அமைக்கப்பட்டு 22 ஆண்டுகளுக்குப் பின்னர், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவார்ந்த முடிவுகளாலும் இடையறாத முயற்சிகளின் பலனாகவும், நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசு இந்திய அரசிதழில் வெளியிட வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டு இந்த ஆணை வழங்கப்பட்ட பின்னரும், 6 ஆண்டுகளாக இவ்வாணையை, அரசிதழில் வெளியிடாமல் காலந்தாழ்த்தி, தமிழ்நாட்டிற்கு மத்திய அரசால் மறுக்கப்பட்டு வந்த இந்நீதி, இறுதியாக உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பால் நிலைநாட்டப்பட்டுள்ளது. காவேரிப் பிரச்சினையில் தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்டிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த முயற்சிகளுக்குக் கிடைத்துள்ள இந்த மகத்தான வெற்றி, வருங்காலச் சந்ததியினரும் நினைவில் கொள்ளத்தக்க வண்ணம், வரலாற்றுப் பெருமைமிக்க காலச் சுவடாக என்றும் நிலைத்து நிற்கும்.

*<u>வறட்சி நிவாரணம் – துயர்துடைப்பு நடவடிக்கைகள்</u>*

3. காலம் தவறிப் பெய்த குறைவான பருவமழையாலும், கர்நாடகம் காவேரியில் தண்ணீர் திறந்து விட மறுத்ததாலும், நமது மாநிலத்தில் வறட்சி நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், அனைத்து முக்கியப் பயிர்களின் பயிர்ப்பரப்பிலும், உற்பத்தியிலும், குறிப்பாக, காவேரிப் பாசனப்

பகுதியில், பெரும் குறைபாடு ஏற்பட்டுள்ளது. மாநிலத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலையைக் கருத்தில் கொண்டு, சென்னை நீங்கலாக, அனைத்து மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்டவையாக அறிவித்து, நிலவரியை ரத்து செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதனால், நமது மாநிலத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் வேலைவாய்ப்புப் பெறுவதற்கு, ஒரு குடும்பத்திற்கான ஆண்டு உச்சவரம்பை 150 நாட்களாக உயர்த்தி, வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கும் பயன் அளித்திட வழி செய்யப்பட்டுள்ளது.

4. காவேரிப் பாசனப் பகுதியில், பயிர் இழப்பை சந்தித்துள்ள விவசாயிகளுக்கான சிறப்பு நிவாரணத் தொகுப்பின் ஒரு பகுதியாக, 50 சதவீதத்திற்கு மேல் பயிர் இழப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு பயிர் இழப்பு, சிறப்பு நிவாரணத்துடன், காப்பீட்டு இழப்பீட்டிற்கான முன்பணமும் சேர்த்து, ஏக்கர் ஒன்றிற்கு, 15,000 ரூபாய் வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மேலும், ஒரு சிறப்பினமாக, இந்த ஆண்டு காவேரிப் பாசனப் பகுதியில் பயிர்க் காப்பீட்டுக் கட்டணத்தில் விவசாயிகளின் முழுப் பங்கினையும் அரசே ஏற்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். இந்தச் சிறப்பு வறட்சி நிவாரணத் தொகுப்பினால் மாநில அரசிற்கு ஏற்படும் மொத்த நிதிச் சுமை 541 கோடி ரூபாயாகும். இந்த நிவாரணத் தொகை, பாதிக்கப்பட்ட மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் மிகக் குறுகிய காலத்தில் நேரடியாக வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், 181 கோடி ரூபாய் செலவில், 15,000 பண்ணைக் குட்டைகள் அமைப்பது உள்ளிட்ட, பல்வேறு திட்டப் பணிகள்

காவேரிப் பாசனப் பகுதியில் 1,517 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் எனவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். கால்நடைத் தீவனப் பற்றாக்குறையை சமாளிக்க 17.85 கோடி ரூபாயும், குடிநீர் விநியோகத்தைச் சீரமைக்க 37.25 கோடி ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது. **மாநிலம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதால், டெல்டா மாவட்டங்கள் அல்லாத பிற பகுதிகளுக்கும் வழங்கப்பட வேண்டிய நிவாரண உதவியை இந்த அரசு முடிவு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விரைவில் அறிவிக்கப்பட உள்ளது.** மேலும், வறட்சி குறித்த விரிவான நிவாரணக் கோரிக்கை மனுவை மத்திய அரசிற்கு அளிக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

## பொருளாதாரச் சூழ்நிலை

6. பொருளாதார வளர்ச்சி குறைந்தும், முதலீட்டாளர்களின் நம்பிக்கை குன்றியும் உள்ள இன்றைய கடுமையான தேசிய பொருளாதாரச் சூழலில், இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. பேரியல் பொருளாதார மேலாண்மையிலும் (macro economic management), நிதிநிலைச் சீரமைப்பு நடவடிக்கைகளிலும் மத்திய அரசு மேற்கொள்ள உள்ள திறமையான நடவடிக்கைகளைப் பொறுத்தே, நாட்டினுடைய பொருளாதாரம் புத்துயிர் பெற வாய்ப்புள்ளது. ஆனால், பொருளாதாரம் நலிந்துவரும் போக்கை மாற்றவும் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தவும் வேண்டிய இந்த இரட்டைக் குறிக்கோள்களை எய்துவதற்கான எந்த ஒரு உறுதிப்பாட்டையும் அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட மத்திய அரசின் வரவு–செலவுத் திட்டம் வெளிப்படுத்தவில்லை என்பது வருத்தத்திற்குரியதாகும்.

**7.** பொருளாதார வீழ்ச்சியின் தாக்கத்தை, குறைந்துவரும் வளர்ச்சியின் மூலமாக, மாநில அரசு ஏற்கெனவே உணரத் தொடங்கியுள்ளது. **2012–2013** ஆம் ஆண்டிற்கான முன் மதிப்பீடுகளின் அடிப்படையில், நிலையான விலை மதிப்பின்படி, மாநிலத்தின் மொத்தப் பொருளாதார உற்பத்தி வளர்ச்சி விகிதம் **4.61** சதவீதம் மட்டுமே இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. கடுமையான வறட்சி, காவேரிப் பாசனப் பகுதியில் பயிர் பாதிப்பு ஆகியவற்றால் முதன்மைத் துறையின் வளர்ச்சி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், சேவைத் துறையின் வளர்ச்சியையும் அது பாதித்துள்ளது. தேசியப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மந்த நிலை, மின் தட்டுப்பாடு ஆகியவற்றால் உற்பத்தித் துறையின் வளர்ச்சியும் பாதிப்படைந்துள்ளது.

**8.** எனினும், இத்தடைகளால் தளர்ந்து விடாமல், துரிதமான வளர்ச்சியுடன், அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய வளர்ச்சிப் பாதையில், மாநிலத்தின் பொருளாதாரத்தை மீட்டெடுத்துச் செல்வதில், தமது பங்கினை ஆற்றிட, இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இந்த சவாலான முயற்சியின் ஒரு பகுதியாக, இந்த வரவு–செலவுத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இந்த வரவு–செலவுத் திட்டத்தின் அணுகுமுறைகள் பற்றி இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

i. முதன்மைத் துறைக்குத் தொடர்ந்து முக்கியத்துவம் அளிப்பதுடன், சேமிப்புக் கிடங்குகள், விற்பனைக் கட்டமைப்பு போன்றவற்றில் முதலீடுகளை அதிகரித்தல்.

ii. மின் உற்பத்தி, சாலை இணைப்புகள் போன்றவற்றை வலுப்படுத்த கட்டமைப்புத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்து புதிய திட்டங்களில் அதிக முதலீடு செய்து, அவற்றை விரைவாகச் செயல்படுத்துதல்.

iii. மாநிலத்தின் பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய பகுதிகளில், குறிப்பாக, தென்மாவட்டங்களில் சமச்சீரான தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க கூடுதல் சிறப்புச் சலுகைகள்.

iv. அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், தொழில் வளர்ச்சியை மீண்டும் உயர்த்தி உறுதிப்படுத்தவும், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு சிறப்புச் சலுகைத் தொகுப்பு.

v. தரம் மிக்க நகர்ப்புரக் கட்டமைப்புகளை ஏற்படுத்திட அதிக நிதி ஒதுக்கீடு.

vi. பொருளாதார நிலையில் பின்தங்கிய பிரிவினர், குறைந்த வருவாய் பிரிவினர் ஆகியோருக்குத் தேவையான நகர்ப்புர வீட்டுவசதித் திட்டங்களில் கூடுதல் முதலீடு.

vii. திறன்மிக்க நிர்வாகத்தின் மூலமாக, சிறப்பாகச் சேவைகளை அளித்து, நலத் திட்டங்களின் செயலாக்கத்தை மேம்படுத்துதல்.

viii. உற்பத்தித் திறன்மிக்க, அதிக வருவாய் கிடைக்கக்கூடிய வேலைகளுக்கான திறன் வளர் பயிற்சிகளை இளைஞர்களுக்கு வழங்கவும், வறுமைக் குறைப்பிற்கும் முக்கியத்துவம் அளித்தல்.

ix. வறியோர், ஆதரவற்றோரைப் பாதுகாத்திடும் திட்டங்கள் மூலம் சமூகப் பாதுகாப்பை வலுப்படுத்துதல்.

x. கல்வி, சுகாதாரம், ஊட்டச்சத்து போன்ற சமூக மேம்பாட்டுத் துறைகளுக்கான நிதிப் பயன்பாட்டை அதிகப்படுத்துதல்.

வறியோர் மீது எந்த ஒரு கூடுதல் வரிச் சுமையையும் சுமத்தாமல், விவேகமான நிதி மேலாண்மை மூலமாக, 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை பொறுப்புடைமை சட்ட நெறிமுறைகளைக் கடைப்பிடித்து, இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆண்டுத் திட்டம்

9. மனித வள மேம்பாட்டுக் குறியீட்டின் அனைத்து அம்சங்களிலும், தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்றிடுவதை, பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது. வேகமான வளர்ச்சியுடன், நீடித்து நிலைக்கத்தக்க, அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய வளர்ச்சியைப் பெற்றிடும் பொருளாதாரத்தை உருவாக்குவதே, இந்த பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், மாநிலத்தின் மொத்த திட்ட ஒதுக்கீடு 2.11 இலட்சம் கோடி ரூபாய் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்ட நடைமுறையின் விளைவாக, வறுமை ஒழிக்கப்படுவதோடு, கூடுதலான, மேம்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரம் உயர்ந்திடவும் வாய்ப்பு ஏற்படும்.

10. **2012–2013 ஆம் ஆண்டின் ஆண்டுத் திட்ட இலக்காகிய 28,000 கோடி ரூபாய்க்கும் கூடுதலாக நமது மாநிலம் எய்தும். மேலும், 2013–2014 ஆம் ஆண்டில் இதற்கான ஒதுக்கீடு 37,000 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதில் முதன்மைத் துறைக்கான ஒதுக்கீடு மட்டும் 20.12 சதவீத அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.**

## சட்டம் ஒழுங்கு

11. முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை தொடர்பாக, மாநிலத்தின் எல்லைப்பகுதிகளில் ஏற்பட்ட பதற்ற நிலை, கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு எதிரான போராட்டம், தண்ணீர்த் தட்டுப்பாட்டால் காவிரிப் பாசனப்பகுதி விவசாயிகளின் கொந்தளிப்பு போன்ற பல்வேறு பெரும் பிரச்சினைகளை, கடந்த இரண்டாண்டுகளில் மாநிலம் சந்திக்க நேர்ந்துள்ளது. சட்டம் ஒழுங்குப் பாதுகாப்புப் பிரிவு, நுண்ணறிவுப் பிரிவு ஆகிய காவல் துறையின் இரு பிரிவுகளும் இந்தக் கடினமான சூழ்நிலைகளைத் திறம்படச் சமாளித்து, மாநிலத்தில் அமைதியை நிலை நாட்டியுள்ளன.

12. இந்த அரசால் தொடங்கப்பட்ட நில மோசடித் தடுப்புச் சிறப்புப் பிரிவுகள் 1,673 வழக்குகளைப் பதிவுசெய்து, 1,137.66 கோடி ரூபாய் மதிப்புள்ள, 10.7 இலட்சம் சதுர அடி வீட்டுமனைகள் உள்ளிட்ட, 2,734 ஏக்கர் நிலத்தை மீட்டு நியாயமான உரிமையாளர்களுக்கு திரும்ப வழங்கியுள்ளன. எந்தவித மத மோதல்களுக்கும் இடம் தராமல் சமூக விரோத சக்திகளை இந்த அரசு அடக்கியுள்ளது. துணிவு நிறைந்த நமது காவல் துறையினரின் விழிப்புணர்வுமிக்க பாதுகாப்பால், மக்கள் பயமின்றி வாழவும், பொருளாதாரம் தடையின்றி செழிக்கவும் தேவையான, அமைதியான, சுமூகமான சூழலை மாநிலம் பெற்றுள்ளது.

13. காவலர்களின் எண்ணிக்கையைக் கணிசமாக உயர்த்தி, தமிழ்நாட்டின் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கான காவல் துறையினரின் எண்ணிக்கை விகிதத்தை, நமது நாட்டிலேயே மிகச் சிறந்த ஒன்றாக இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. 2012–2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் 12,152 காவலர்கள், 377 சிறைக் காவலர்கள் மற்றும் 791 தீயணைப்புப் பணியாளர்கள் தேர்வு

செய்யப்பட்டுள்ளனர். **2013–2014 ஆம் ஆண்டில் 17,138 காவலர்கள், 1,091 துணை ஆய்வாளர்கள், 1,005 தீயணைப்புப் பணியாளர்கள் மற்றும் 292 சிறைக் காவலர்களை இந்த வாரியம் மேலும் தேர்வு செய்யும்.**

14. சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளைத் திறம்படக் கையாளத் தேவையான வசதிகளை காவல் துறைக்கு இந்த அரசு அளித்துள்ளது. 2012–2013 ஆம் ஆண்டில், வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 169 காவல் நிலையங்களில், 60 காவல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக 27.07 கோடி ரூபாய்க்கு அரசு அனுமதியளித்துள்ளது. **மீதமுள்ள 109 காவல் நிலையங்களுக்கும், சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்காக 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 50 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் காவல் நிலையங்களும் சொந்தக் கட்டடத்தில் மட்டுமே இயங்குவதை இது உறுதி செய்யும்.** மேலும், 2012–2013 ஆம் ஆண்டில் 4,096.70 கோடி ரூபாயாக இருந்த காவல் துறைக்கான மொத்த ஒதுக்கீடு, 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 4,706.17 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

15. 2012 ஆம் ஆண்டில், நமது தீயணைப்புப் பணியாளர்களின் தீரம் மற்றும் உறுதிப்பாட்டின் காரணமாக 3,796 உயிர்கள் காப்பாற்றப்பட்டதோடு, 338 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்களும் பாதுகாக்கப்பட்டுள்ளன. 2012–2013 ஆம் ஆண்டில் 186.72 கோடி ரூபாயாக இருந்த தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கான ஒதுக்கீடு, 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 208.48 கோடி ரூபாயாக இந்த அரசால் உயர்த்தப்பட்டுள்ளது. இது போன்றே சிறைத் துறைக்கும் 179.67 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**16.** நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுதல், குடியிருப்புகளை அமைத்தல் போன்ற, நீதிமன்றக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளுக்காக, கடந்த இரண்டாண்டுகளில் **162.13** கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. **2012–2013**–லிருந்து **2014–2015** ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், பதின்மூன்றாவது நிதிக்குழுவின் நிதியுதவி மூலமாக நீதித் துறை மேம்பாட்டிற்கு மேலும் **148.49** கோடி ரூபாய்க்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த **2013–2014** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் நீதித் துறைக்கென **695.28** கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## மின் ஆளுமை முயற்சிகள்

**17.** ஆளுநர் உரையில் அறிவித்தவாறு, அனைத்துத் துறைகளும் பயன்படுத்தக்கூடிய வகையில் ஒருங்கிணைந்த தகவல் தொகுப்பைக் கொண்ட, மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையத்தை (State Residents Data Hub) இந்த அரசு ஏற்படுத்தும். சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள், திருமண உதவித் தொகைகள், கல்வி உதவித் தொகைகள், பொதுவிநியோகத் திட்டத்தில் அளிக்கப்படும் பயன்கள், மாணவர்களைப் பதிவு செய்யும்முறை, முதலமைச்சரின் புதிய விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், விலையில்லா இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் வழங்கப்படும் பல்வேறு உதவிகளையும், மாநில குடியிருப்போர் தகவல் மையத்தின் மூலமாக, ஆதார் அடிப்படையில் வழங்குவதற்கான சோதனைத் திட்டம் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்தப்படும். அதன் அடிப்படையில் மாநிலம் முழுவதும் இச்செயல்முறை விரிவுபடுத்தப்படும்.

**18.** இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற போது, பலதுறைகளிலும் அதிக அளவிலான காலிப் பணியிடங்களால் மாநில நிர்வாகமே

செயலிழந்து இருந்தது. இந்த காலிப் பணியிடங்களை நிரப்பத் தேவையான விரைவு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்தது. இதுவரை, பல்வேறு துறைகளில் இருந்த 1,61,142 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. கூட்டுறவுச் சங்கங்களிலும் மற்றும் வங்கிகளிலும் 9,914 பணியாளர்கள் புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதுபோன்றே, பொதுத் துறை நிறுவனங்களில் 22,452 பேர் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல் இதுவரை, மொத்தம் 1,93,508 நபர்களைப் பணியமர்த்தி, நிர்வாகத்தை இந்த அரசு சீரமைத்துள்ளது.

## வருவாய் நிர்வாகம்

19. சட்டம் ஒழுங்கை திறம்பட பராமரித்தல், நில நிர்வாகம், சிறப்பான மக்கள் குறைகளைத் தீர்க்கும் முறை ஆகியவற்றை வருவாய் நிர்வாகம் உறுதி செய்கிறது. கடந்த இரண்டாண்டுகளில் ஒன்பது புதிய வட்டங்களும் ஒரு புதிய வருவாய்க் கோட்டமும் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட விரைவுப் பட்டா மாறுதல் முறை 26 இலட்சத்திற்கும் மேற்பட்ட பட்டா மாறுதல் விண்ணப்பங்களைத் தீர்வு செய்ய உதவிபுரிந்துள்ளது. இந்தத் திட்டம் தொடங்கப்பட்டபோது 1,46,067 விண்ணப்பங்கள் நிலுவையில் இருந்த நிலை மாறி, தற்போது இது 33,000–க்கும் கீழ் குறைந்துள்ளது. 2012–2013 ஆம் ஆண்டில், பிப்ரவரி மாதம் வரை 1.2 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. **2013–2014 ஆம் ஆண்டிலும் மேலும் இரண்டு இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்க உள்ளோம்.**

## வறுமை ஒழிப்பு

20. கிராமப் பகுதிகளிலும், நகர்ப்புரங்களிலும் வறுமையை ஒழிக்க ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வேலைவாய்ப்புத் திட்டங்களையும் இதர நலத்திட்டங்களையும் செயல்படுத்துவதோடு, உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் புதுவாழ்வு திட்டத்தின் கீழ், வறுமையைக் குறைப்பதற்கு சமூகப் பங்கேற்புடன் பொருளாதார மேம்பாட்டு உதவிகள் நேரடியாக வழங்கப்பட்டு வருகின்றன. 2012–2013 ஆம் ஆண்டிலிருந்து, புதுவாழ்வு திட்டத்தின் உத்திகளைப் பின்பற்றி, கிராமப்புற வறுமையை ஒழிப்பதற்காக, 60 வட்டாரங்களில் தமிழ்நாடு மாநில கிராமப்புற வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வரும் ஆண்டுகளில் படிப்படியாக இத்திட்டம் மாநிலம் முழுவதிலும் செயல்படுத்தப்படும். **2013–2014 ஆம் ஆண்டில் மேலும் 110 வட்டாரங்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும்.** 2013–2014 ஆம் ஆண்டில், புதுவாழ்வு திட்டத்திற்காக 350 கோடி ரூபாயும், தமிழ்நாடு மாநில கிராமப்புற வாழ்வாதார இயக்கத்திற்கான மாநில அரசின் பங்காக 100 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

21. நகர்ப்புர வறுமைக் குறைப்பிற்கான சுவர்ண ஜெயந்தி ஷகரி ரோஸ்கார் யோஜனா திட்டத்திற்காக 2013–2014 ஆம் ஆண்டில் மொத்தம் 99.73 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நகர்ப்புர வறுமை நிலையில், குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்திட, 2012–2013 ஆம் ஆண்டில் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு மாநில நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் தொடங்கப்பட்டது. நகர்ப்புர வறுமைக் குறைப்பினை இலக்காகக் கொண்டுள்ள அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, அதில் ஏற்படும் நிதிப் பற்றாக்குறையை நிறைவு செய்ய, தமிழ்நாடு மாநில நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் பெறப்படும் நிதி பயன்படுத்தப்படுகிறது. **2013–2014 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்திற்காக 200 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.**

**22.** வரும்காலத்தில், அனைத்து வறுமை ஒழிப்பு முயற்சிகளுக்கும் அடிப்படையாக அமையக்கூடிய வகையில், கிராமப் பகுதிகளிலும், நகர்ப்புர பகுதிகளிலும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய குடும்பங்களைக் கண்டறிவதற்கான சமூகப் பொருளாதாரக் கணக்கெடுப்பு தற்போது நடைபெற்று வருகிறது. குடும்ப அடிப்படையிலான செயல் திட்டங்களைக் கொண்டு செயல்படுத்தப்படும் இத்தகைய ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறை, கிராமப்புற நகர்ப்புர வறுமையை பெருமளவு குறைத்து, தமிழகத்தை வறுமையில்லா மாநிலமாக மாற்றிட வேண்டும் என்ற நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்க்க தரிசனத்தை நனவாக்கும் என உறுதியாக நம்புகிறேன்.

## இளைஞர் நலன் மற்றும் வேலைவாய்ப்பு

**23.** தமிழகத்தின் மக்கள் தொகையில் ஏறத்தாழ 25 சதவீதம் பேர் இருபது முதல் முப்பத்து நான்கு வயதிற்குள் உள்ளனர். இந்த இளந் துடிப்புமிக்க இளைஞர்களிடமே நமது மாநிலத்தின் எதிர்காலம் உள்ளது. சுயவேலைவாய்ப்புப் பெறவோ அல்லது உற்பத்தித் துறை மற்றும் சேவைத் துறைகளில் பணிபுரியவோ, இந்த இளைஞர்கள் ஊக்குவிக்கப்பட்டு உரிய பயிற்சி அளிக்கப்பட வேண்டும். அவர்களுடைய திறமைகளை ஒருமுகப்படுத்தி, உற்பத்தி ஆற்றலை உயர்த்தி, அதிக வருவாய் தரக்கூடிய பணிகளை மேற்கொள்ளத்தக்க வகையில் திறன்வளர் பயிற்சி மூலம் அவர்களுக்கு வலுவூட்டுவது நமது கடமை ஆகும்.

**24.** தமிழ்நாடு திறன்மேம்பாட்டு இயக்கத்தை செயல்படுத்திவரும், மாநில திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக, திறன்வளர் பயிற்சிக்கு நாம் அளித்துவரும் முக்கியத்துவம் தொடரும். **75 கோடி ரூபாயாக இருந்த மாநில திறன் மேம்பாட்டு இயக்கத்திற்கான ஒதுக்கீடு வரும் நிதியாண்டில் 100 கோடி ரூபாயாக உயர்த்தப்படும்.**

**மேலும், வடிவமைக்கப்பட்ட திறன் பயிற்சியை தொடர்ந்து அளிப்பதற்காக எட்டு கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.**

**25.** தொழில் துறையின் திறன் தேவைகளுக்கு ஏற்ப பயிற்சித் திட்டங்களை மாற்றிடும் வகையில் தொழில் துறையினரின் பங்கேற்போடு பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்கான வாய்ப்புகளையும் மாநிலம் கருத்தில் கொள்ளும். மேலும், நமது இளைஞர்களுக்கு உலகத் தரத்திலான திறன்களை அளித்து, அவர்களை உலக அளவில் பணிவாய்ப்புகளைப் பெறக்கூடிய தகுதியுடையவர்களாக்க, சர்வதேச நிறுவனங்களிடமிருந்து நிதியுதவியையும் தொழில்நுட்ப உதவியையும் பெற அரசு நடவடிக்கை எடுக்கும்.

**26.** தொழில் முனையும் திறன்வளர் பயிற்சித் திட்டத்தின் மூலமாக, இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புகளை அளித்திடுவதற்கான சிறப்பு முயற்சிகள் தொடரும். **2013–2014 ஆம் ஆண்டில், இளைஞர்களுக்கு இந்தப் பயிற்சியை அளிப்பதற்காக தொழில்முனையும் திறன்வளர்ச்சி நிறுவனத்திற்கு ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## உள்கட்டமைப்பு

*தொலைநோக்குத் திட்டம் 2023 பகுதி 2 – உயர்ந்த இலக்கு*

**27.** பொருளாதாரத்தில் உயர் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக, பல முக்கியக் கட்டமைப்புத் திட்டங்களில் குறிப்பிடத்தக்க அளவில் முதலீடுகள் செய்வதற்கு, இந்த அரசு முக்கியத்துவம் அளிக்கும். இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் கால அளவை மனதில் கொண்டு, செயல்படுத்தத்தக்க, முக்கியக் கட்டமைப்புத் திட்டங்களின் தொகுப்பைக் கொண்டுள்ள தொலைநோக்குத் திட்டம்

2023–ன் இரண்டாவது பகுதிக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற தமிழ்நாடு மாநில கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் முதல் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அடுத்த பத்தாண்டுகளில், 15 இலட்சம் கோடி ரூபாய் அளவிலான மொத்த முதலீடுகள் பெறுவதை தொலைநோக்குத் திட்டம் 2023 இலக்காகக் கொண்டுள்ளது. வேளாண்மை மற்றும் பாசனத் துறையில் 1,27,250 கோடி ரூபாயும், நகர்ப்புர கட்டமைப்புத் துறையில் 2,59,000 கோடி ரூபாயும் போக்குவரத்து மற்றும் சாலைத் துறையில் 3,65,927 கோடி ரூபாயும், மனித ஆற்றல் மேம்பாட்டிற்காக 60,120 கோடி ரூபாயும் இதனுள் அடங்கும். 2023 ஆம் ஆண்டு வாக்கில் கட்டமைப்புத் துறையில் 60 சதவீத முதலீடு, தனியார் துறையிடமிருந்து பெறப்படும் என கணக்கிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் வேகமான கட்டமைப்பு வளர்ச்சிக்கான, தெளிவான கொள்கை மற்றும் நடைமுறை அமைப்பினை ஏற்படுத்தும் நோக்குடன் தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒளிவுமறைவின்மை (பொதுத் துறை தனியார் துறை பங்கேற்புக் கொள்முதல்) விதிகளோடு, தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு சட்டம், விதிகள் மற்றும் வரைமுறைகள் நடப்பு ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளன. **2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், கட்டமைப்பு மேம்பாட்டு நிதிக்காக 2,000 கோடி ரூபாயும், திட்ட வடிவமைப்பு நிதிக்காக 200 கோடி ரூபாயும் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளன.**

## முதன்மைத் துறை

### வேளாண்மை

28. 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் முதன்மைத் துறைக்கான மொத்த ஒதுக்கீடு 17,220.89 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. **நடப்பு நிதியாண்டில் 4,829.93 கோடி ரூபாயாக**

**இருந்த, வேளாண் துறைக்கான ஒதுக்கீடு, 2013–2014 ஆம் ஆண்டில், இதுவரை இல்லாத அளவில் அதாவது 5,189.15 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.**

**29.** கடந்த இரண்டாண்டுகளில், வேளாண் உற்பத்தித் திறனைப் பெருக்கி, மாநிலத்தில் இரண்டாவது பசுமைப் புரட்சியை ஏற்படுத்துவதற்கான வலுவான அடித்தளத்தை இந்த அரசு அமைத்துள்ளது. சிறந்த வேளாண் விரிவாக்க நடைமுறைகளையும் மற்றும் உயர் தொழில்நுட்பங்களையும் பரவலாக்குதல்; கலப்பு விவசாயம் மற்றும் ஒருங்கிணைந்த விவசாயம் மூலமாக பண்ணை அளவிலான உற்பத்தித் திறனைப் பெருக்குதல்; நுண்பாசனத் திட்டம் போன்றவற்றைப் பயன்படுத்தி நீர் சேமிப்பு முறைகளைப் பின்பற்றுதல்; சிறு குறு விவசாயிகளுக்கும் வேளாண் இயந்திரமயமாக்கலை விரிவாக்குதல்; அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மையையும் பதப்படுத்துதலையையும் ஊக்குவித்து வேளாண் சந்தைகளை ஒருங்கிணைத்தல் ஆகியவற்றின் மூலமாக, பண்ணை அளவிலான வருவாயைப் பெருக்குவதற்கான உத்திகளை இந்த அரசு தொடர்ந்து பின்பற்றும்.

*<u>தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்</u>*

**30.** 2012–2013 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்திற்கு 669 கோடி ரூபாய்க்கான ஒப்புதலை தமிழகம் பெற்றுள்ளது. இது நமது மாநிலத்திற்கு இதுவரை கிடைத்திராத உயர் ஒதுக்கீடாகும். இத்திட்டத்திற்காக, 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 700 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. **வேளாண் விரிவாக்கப் பணிகளை மேலும் திறம்பட மேற்கொள்ள, பெரும் வெற்றிபெற்றுள்ள முயற்சியான உழவர் பெருவிழா 2013–2014 ஆம் ஆண்டிலும் 46 கோடி ரூபாய் செலவில் தொடரப்படும். பயிர் உற்பத்தித்**

**திறனை உயர்த்திட, மேலும் ஐந்து இலட்சம் ஏக்கர் நெல் சாகுபடிப் பரப்பு திருந்திய நெல் சாகுபடி (System of Rice Intensification) முறையின் கீழ் கொண்டு வரப்படும்.** திருந்திய பயறு சாகுபடித் திட்டம் (System of Pulse Intensification), நவீன கரும்பு சாகுபடித் திட்டம் (Sustainable Sugarcane Initiatives) ஆகியனவும் பெருமளவில் ஊக்குவிக்கப்படும். தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் 24 கோடி ரூபாய் செலவில் மானாவாரி நிலங்களின் உற்பத்தி நிலைப்படுத்தப்படும். வேளாண் இயந்திரமயமாக்கலுக்கும் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

*போதுமான, தரமான வேளாண் இடுபொருட்கள்*

31. உயர் வேளாண் உற்பத்தியை அடைவதற்கு, தரமான விதைகள், உரங்கள் ஆகியவை உரிய நேரத்தில் வழங்கப்படுவது இன்றியமையாததாகும். அதிக விளைச்சல் தரக்கூடிய இரகங்களைப் பரவலாக்கவும், விதை மாற்று விகிதத்தை மேம்படுத்தவும் ஆண்டு விதைத் திட்டம் தயாரிக்கப்படுகிறது. பல்வேறு பயிர்களுக்கான தரமான விதைகளை உற்பத்தி செய்து விநியோகிப்பதற்கு, 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 161.62 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொதுவாக உரங்கள், குறிப்பாக டி.ஏ.பி. போன்ற பாஸ்பாட்டிக் உரங்கள், தக்க நேரத்தில் கிடைப்பதை உறுதிசெய்ய, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு சுழல் நிதியாக 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*தோட்டக்கலை – எதிர்காலத்திற்கான வழி*

32. 2013–2014 ஆம் ஆண்டில் தேசியத் தோட்டக்கலை இயக்கத்திற்கான (National Horticulture Mission) ஒதுக்கீடு ரூபாய் 140 கோடியாக இருக்கும். 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத்

திட்டத்தில் இதற்கென மாநிலத்தின் பங்காக 21 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **தற்போது 7.25 இலட்சம் ஏக்கராக உள்ள காய்கறி சாகுபடிப் பரப்பை, வரும் ஆண்டில் 8.2 இலட்சம் ஏக்கராக உயர்த்திட சிறப்புக் கவனம் அளிக்கப்படும்.**

33. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் தேசியத் தோட்டக்கலை இயக்கத்தின் நிதிகளை ஒருங்கிணைத்து, எளிதில் கெடக்கூடிய (perishables) வேளாண் பொருள்களைக் கையாளும் சந்தைகளை, கிராம உற்பத்தி தொகுப்புகளுடன் (village production clusters) ஒருங்கிணைப்பதற்கான சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். துல்லியப் பண்ணைமுறை, வலை நிழல் சாகுபடி (shade net cultivation). பசுமைக் குடில் சாகுபடி (polyhouse / greenhouse) போன்ற பாதுகாக்கப்பட்ட வேளாண் சாகுபடி நடைமுறைகளைக் கொண்ட புதுமையான தொழில்நுட்பங்கள் ஊக்குவிக்கப்படும். ஏற்கெனவே அறிவித்தவாறு, நகரங்களைச் சூழ்ந்துள்ள பகுதிகளில் காய்கறிகள் பயிரிடுவதை ஊக்குவிப்பதற்கான திட்டம், 34 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். விவசாயிகளுக்குக் கிடைக்கும் விலைக்கும், நுகர்வோர் வாங்கும் விலைக்கும் உள்ள இடைவெளியைக் குறைப்பதோடு வேளாண் விளைபொருள் சேதத்தைக் குறைக்கவும் இந்த முயற்சி உதவும்.

34. நுண்ணீர் உரப்பாசனம் (Fertigation) மூலமாக துல்லியப் பண்ணை முறையை நவீனமயமாக்க, திரவ உரங்கள் முக்கியமானதாகும். **வேளாண் பருவம் முழுவதிலும், திரவ உரங்கள் சரியான காலத்தில் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், இவற்றை வாங்கி சேமித்து விநியோகிக்க, 50 கோடி ரூபாயை சுழல்நிதியாக இந்த அரசு 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்துள்ளது.**

*<u>வேளாண் துறை உள்கட்டமைப்புக்கு ஊக்கம்</u>*

**35.** தேவையான சேமிப்பு வசதிகள், சந்தை நிலவரம் பற்றிய தகவல்கள் பரிமாற்றம், சந்தைகளை அடைவதற்கு உரிய போக்குவரத்து வசதிகள் ஆகியன இல்லாததால், தமது விளைபொருட்களை விவசாயிகள் குறைந்த விலைக்கு விற்க நேரிடுகிறது. **தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில், 15 கோடி ரூபாய் செலவில் குறிப்பிட்ட வேளாண் சந்தைகளின் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு, அவற்றின் செயல்பாடு ஒருங்கிணைக்கப்படும். மேலும், எம்.சி.எக்ஸ் (MCX) மற்றும் என்.சி.டெக்ஸ் (NCDEX) போன்ற பொருட் சந்தைகளோடும் (commodity exchange) இவை இணைக்கப்படும்.** இம்முயற்சிகள் பொருட்சேதத்தைக் குறைப்பதோடு, சந்தை நிலவரம் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொள்ளவும் உதவும். சேமிப்புக் கிடங்கு வசதிகளை அதிகரிப்பதற்கான இந்த அரசின் முயற்சிகளும் தொடரும். அறுவடைக்குப் பின் வேளாண் விளைபொருட்களைக் கையாண்டு பதப்படுத்தும் வசதிகளை வலுப்படுத்தும் முயற்சி வேளாண் விளைபொருட்களின் விலையை, குறிப்பாக, கெட்டுப்போகக்கூடிய விளைபொருட்களின் விலையை நிலைப்படுத்தும். **தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கத்தில் (National Mission for Food Processing), வேளாண் விளைபொருள் பதப்படுத்தும் தொழிற்சாலைகளை நிறுவுவதற்காக 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

*<u>பருவநிலை – பாதிப்பால் ஏற்படும் இழப்பைக் குறைத்தல்</u>*

**36.** பருவநிலை மாறுபாடுகளினால் பாதிக்கப்படாமல் இருக்க, மாறுபாடுகளைக் கண்டறிதல், அவற்றை எதிர்நோக்கி நடவடிக்கை எடுத்தல், அவற்றால் ஏற்படும் பாதிப்பைக் குறைத்தல் ஆகிய உத்திகளை

வேளாண்மையில் கையாள வேண்டியது அவசியமாகும். வறட்சி, வெள்ளம், உறுதியற்ற மழையளவு போன்ற பல்வேறு பருவநிலை மாறுபாடுகளைச் சமாளிக்க இந்த அரசு பன்முனை அணுகுமுறையைப் பின்பற்றி வருகிறது. நூறு சதவீத பயிர்க்காப்பீட்டு அளவை அடைந்திட இந்த அரசு முயற்சி செய்யும். 2013–2014 ஆம் ஆண்டில் பயிர்க்காப்பீட்டுத் திட்டங்களில் மாநில அரசின் பங்காக 42.95 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

37. சொட்டுநீர் பாசனம் மூலமாக நீரைச் சேமித்துப் பயன்படுத்துவதற்கு பெரும் முக்கியத்துவம் அளிக்கப்படும். **2013–2014 ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களின் நிதியை ஒருங்கிணைத்து, 520 கோடி ரூபாய் செலவில் 1.30 இலட்சம் ஏக்கர் பயிர்ப்பரப்பு நுண்ணீர்ப் பாசனத்தின் கீழ் கொண்டுவரப்படும். சிறு குறு விவசாயிகளுக்கு நுண்ணீர்ப் பாசனத் திட்டங்களின் கீழ் பயன்பெறுவதற்கான ஒரு ஏக்கர் என்ற உச்சவரம்பு நீக்கப்படும். தரமான நிறுவனங்களைத் தேர்வு செய்வதற்கு விவசாயிகளுக்கே முழுச் சுதந்திரம் அளிக்கப்படும்.** திட்ட மானியம் விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக மாற்றப்பட்டு, அவர்களுக்கு வழங்கப்பட்ட உறுதிச் சீட்டு (Farmers Vouchers) மூலமாகவும், தனி நிறுவனத்தின் ஆய்வறிக்கை அடிப்படையிலும் (Third Party Inspection) திட்டம் முறையாக செயல்படுத்தப்பட்டதை உறுதி செய்த பிறகே, உபகரணத்தை வழங்கிய நிறுவனத்திற்கு உரிய தொகை விடுவிக்கப்படும்.

## கூட்டுறவு

*உரிய காலத்தில் போதுமான கடன் வசதி*

**38.** வேளாண் உற்பத்தியை உயர்த்துவதில் தேவையான காலத்தில் கடன் கிடைப்பதன் முக்கியத்துவத்தை அனைவரும் அறிவர். நடப்பு நிதியாண்டில், 2013 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரையில் 3,720 கோடி ரூபாய் கூட்டுறவு நிறுவனங்களால் பயிர்க்கடனாக வழங்கப்பட்டுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டில் பயிர்க்கடன் வழங்குவதற்கான ஆண்டுக் கடன் திட்ட இலக்கு 39,135 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. **கூட்டுறவு அமைப்புகள் மூலமாக இந்த ஆண்டு வழங்கப்படும் பயிர்க் கடன்களுக்கான இலக்கு 4,000 கோடி ரூபாயாகும். வரும் நிதியாண்டில் இந்த இலக்கு 4,500 கோடி ரூபாயாக உயர்த்தப்படும்.**

**39.** கடனை உரிய நேரத்தில் முழுமையாகத் திருப்பிச் செலுத்தக்கூடிய விவசாயிகளுக்கு, கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் மூலமாக வட்டி இல்லா பயிர்க் கடன் வழங்கப்பட்டு வருகிறது. 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் இந்த பயிர்க்கடன் வட்டி மானிய உதவிக்காக 160 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**40.** கடந்த இரண்டாண்டுகளில் கூட்டுறவு அமைப்புகளின் சேமிப்புக் கிடங்குக் கட்டமைப்பு வசதிகள் குறிப்பிடத்தக்க அளவிற்கு வலுப்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை, 237.02 கோடி ரூபாய் செலவில், 2.85 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2,270 சேமிப்பு கிடங்குகளுக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் குறைந்தபட்சம்

100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு வசதியைப் பெற்று, வேளாண் விளைபொருள் அடமானக் கடன்களை (Produce Pledge Loan) விவசாயிகளுக்கு அளிக்க வழிவகை ஏற்பட்டுள்ளது.

**41.** ஏற்கெனவே உறுதியளித்தவாறு கூட்டுறவு அமைப்புகளுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. **22,532** கூட்டுறவு அமைப்புகளுக்கான தேர்தல் நான்கு கட்டங்களாக நடத்தப்படும். இதற்கான நடவடிக்கைகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன. கூட்டுறவு நிறுவனங்களில் ஜனநாயகம் தழைத்தோங்கச் செய்யும் இலக்கு எய்தப்படுவதை இது உறுதி செய்யும்.

## கால்நடைப் பராமரிப்பு

**42.** விவசாயிகள் நிலையான வருவாய் ஈட்டுவதற்கான வாய்ப்பைப் பெற கால்நடை வளர்ப்பு உதவுகிறது. இத்துறைக்கு முன் எப்போதும் இல்லாத அளவிற்கு அரசு முக்கியத்துவம் அளித்துள்ளது. இந்த **2013–2014** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் இத்துறைக்கு **1,082.64** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது **2010–2011** ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டை விட **240** சதவீதம் கூடுதலாகும்.

### *இரண்டாவது வெண்மைப் புரட்சி*

**43.** விலையில்லாக் கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளை வழங்கும் முன்னோடித் திட்டம், இரண்டு வெற்றிகரமான ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இதுவரை, **24,000** கறவைப் பசுக்களும், **10** இலட்சம் வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளும் மாநிலம் எங்கும் விநியோகிக்கப்பட்டுள்ளன. இந்த வெற்றிச் சகாப்தத்தைத் தொடரும் வகையில் **2013–2014 ஆம் ஆண்டில், 12,000 கறவைப் பசுக்களும், 1.5 இலட்சம் நிலமற்ற ஏழைப் பெண்களுக்கு**

**ஆறு இலட்சம் செம்மறி ஆடுகள் மற்றும் வெள்ளாடுகளும் வழங்கப்படும். இதற்காக 250 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.**

44. இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து, தீவனப் பெருக்கத் திட்டத்தில், 50,000 ஏக்கர் பரப்பு பசுந்தீவன உற்பத்தியின் கீழ் வெற்றிகரமாக கொண்டுவரப்பட்டுள்ளது. **இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு 25 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டு, 2013–2014 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். மரத்தீவனப் பயிர்களும் இத்திட்டத்தில் ஊக்குவிக்கப்படும்.**

*உள்கட்டமைப்பிற்கு ஊக்கமளித்தல்*

45. இரண்டாவது வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தும் நோக்குடன் கால்நடை மருத்துவத் துறைக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக 235 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கியுள்ளது. கடந்த இரண்டாண்டுகளில், ஏறத்தாழ 1,500 கால்நடை மருத்துவ நிலையங்களில் சீரமைப்பு மற்றும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 585 துணை மையங்கள் கால்நடை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும், 303 கால்நடை ஆய்வாளர்களும் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர். ஏற்கெனவே அறிவித்தபடி, திருநெல்வேலியிலும் ஒரத்தநாட்டிலும் இரண்டு புதிய கால்நடை மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**46. 2013–2014 ஆம் ஆண்டில், மேலும் 100 கால்நடைத் துணை நிலையங்கள் கால்நடை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படும். 450 கால்நடை மருத்துவமனைகளில், 115 கோடி ரூபாய் செலவில் கட்டடங்கள் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த வரவு–செலவுத்**

**திட்டத்தில் தற்போதுள்ள கால்நடை மருத்துவமனைகளை மேலும் சீரமைக்க 25 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.**

*ஆவின் செயல்பாடு*

**47.** பால் உற்பத்தித் துறையில் இந்த அரசு எடுத்த முயற்சிகளின் விளைவாக, மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் பால் கொள்முதல், உயர் உற்பத்திக் காலங்களில் நாளொன்றுக்கு 27.14 இலட்சம் லிட்டர் என்ற உயர் அளவை எட்டியுள்ளது. பால் பதப்படுத்தும் திறனை அதிகரிக்க சென்னை பால்பண்ணைகள் மற்றும் பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். பால் உற்பத்திச் சங்கங்கள் மூலம் கால்நடைத் தீவனத்தை வழங்க ஈரோட்டிலுள்ள கால்நடைத் தீவன உற்பத்தித் தொழிற்சாலை 14 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு மீண்டும் செயல்பட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

*கோழி வளர்ப்பு*

**48.** ஓசூரில் 45.96 கோடி ரூபாய் செலவில் கோழி உற்பத்தி மற்றும் மேலாண்மை நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. கோழி வளர்ப்பு பிரபலமாகாத பகுதிகளிலும் கோழி வளர்ப்பை ஊக்குவிக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் நல்ல பலன்களை அளிக்கத் தொடங்கியுள்ளன. 2013–2014 ஆம் ஆண்டிலும், இத்தகைய பகுதிகளில் கோழி வளர்ப்பை ஊக்குவிக்க 25 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## மீனளம்

*<u>மீனவர் நலன்</u>*

49. மீனவர்களின் நிலையை மேம்படுத்தி அவர்கள் வாழ்வை வளம்பெறச் செய்ய, மீன் பிடிப்பு குறைவாக உள்ள காலங்களில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 4,000 ரூபாய் நிவாரணம் அளித்தது, மீன் பிடிப்பு தடைசெய்யப்பட்ட காலங்களில் வழங்கப்படும் நிவாரணத்தை 1,000 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்தியது மற்றும் மானியத்தோடு எரிபொருள் வழங்குவது போன்ற பல்வேறு சிறப்பான முயற்சிகளை இந்த அரசு எடுத்துள்ளது. மேற்கூறிய நலத்திட்டங்களுக்காக 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத்திட்டத்தில், அரசு 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

50. **ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிப்பதற்காக, புதிய ஆழ்கடல் டியூனா மீன்பிடிப் படகுகளை வாங்குவதற்கு வழங்கப்படும் 25 சதவீத மானியம் 50 சதவீதமாக உயர்த்தப்படும். இதற்காக, 30 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். ஆழமற்ற கடல் பகுதிகளில் செய்யப்படும் இழுவை மீன்பிடி முறையிலிருந்து, நிலைக்கத்தக்க ஆழ்கடல் மீன்பிடி முறைக்கு நமது மீனவர்களை இது மாறச் செய்யும் என நான் நம்புகிறேன்.**

*<u>கட்டமைப்பு மேம்பாடு</u>*

51. கடந்த இரண்டாண்டுகளில் மீன் வளத்துறையை வலுப்படுத்துவதற்காக பல்வேறு கட்டமைப்புத் திட்டப் பணிகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. இருபத்து மூன்று மீன் இறங்கு தளங்கள் மற்றும் நான்கு மீன்பிடித் துறைமுகங்கள் தொடர்பான பணிகள் 245 கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன. கடலூர், பழையாறு,

நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள மீன்பிடித் துறைமுகங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

52. **2013–2014 ஆம் ஆண்டில் கடலூர் மாவட்டத்தில் உள்ள முடசலோடையில் புதிய நவீன மீன் இறங்கு தளம் 7.78 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். இராமநாதபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் பொதுத் துறை– தனியார் துறை பங்கேற்பு மூலமாக இரண்டு மீன் பதப்படுத்தும் பூங்காக்கள் வரும் நிதியாண்டில் அமைக்கப்படும். 2013–2014 ஆம் ஆண்டில், நாகூரிலும் பரங்கிப்பேட்டையிலும் தலா 10 கோடி ரூபாய் செலவில் ஆழமற்ற முகத்துவாரங்களில் பாதுகாப்பாக படகுகள் சென்றுவர ஏதுவாக முகத்துவாரங்களை நிலைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.** மீன்வளத் துறைக்காக 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 467.44 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## உணவுப் பாதுகாப்பு

### *அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் – ஒரு முன்னோடித் திட்டம்*

53. மத்திய அரசால் உத்தேசிக்கப்பட்டுள்ள உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் மீதான முடிவு எத்தகையதாக இருப்பினும் அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய பொது விநியோகத் திட்டத்தை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தும். அனைவருக்கும் உணவு கிடைக்கச் செய்து, மாநிலத்திலிருந்து பசிப் பிணியை அறவே அகற்றும் வண்ணம், 2011 ஜுன் மாதத்திலிருந்து அரிசி பெறத் தகுதியான குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் விலையில்லா அரிசியை இந்த அரசு வழங்கி வருகிறது. இன்றியமையாப் பொருள்களின் விலை

உயர்விலிருந்து ஏழை எளிய மக்களைப் பாதுகாப்பதற்கான சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தில், துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு, பாமாயில் ஆகியவற்றையும் மானிய விலையில் இந்த அரசு வழங்கி வருகிறது. **உணவு மானியத்திற்காக 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 4,900 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**54.** பொது விநியோகத் திட்டத்தில் நல்ல தரமான அரிசி கிடைக்கச் செய்யும் வகையில், தமிழ்நாடு குடிமைப் பொருள் வழங்கல் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஏழு அரிசி ஆலைகள் 26.27 கோடி ரூபாய் செலவில் நவீனமயமாக்கப்பட்டுள்ளன. **2013–2014 ஆம் ஆண்டில் இக்கழகம் மேலும் ஏழு அரிசி ஆலைகளை 32.6 கோடி ரூபாய் செலவில் நவீனமயமாக்கும்.** நவீன அரிசி ஆலைகளின் திறனை உயர்த்துவதோடு, அரவை செய்து அளிக்கும் அரிசியின் தரத்தையும் இந்த நடவடிக்கைகள் உயர்த்தும்.

*விலைவாசிக் கட்டுப்பாடு*

**55.** அத்தியாவசியப் பொருள்களுடைய விலைகள் தொடர்ந்து உயரும் போக்கிற்கு, மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் எரிபொருள் விலை நிர்ணயக் கொள்கைகளே காரணமாகும். பெட்ரோல், டீசல் விலைகள் தொடர்ந்து உயர்த்தப்பட்டு வருவதால் முதன்மைப் பொருள்களின் விலையும் பாதிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த இந்த அரசு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்:–

i. பொது விநியோகக் கடைகள் மூலமாக, துவரம் பருப்பு மற்றும் உளுந்தம் பருப்பு ஆகியவற்றை கிலோ ஒன்றிற்கு 30 ரூபாய் என்ற விலையிலும், பாமாயிலை லிட்டர் ஒன்றிற்கு 25 ரூபாய் என்ற

விலையிலும் இந்த அரசு விநியோகித்து வருகிறது. **இத்திட்டம் 31.3.2014 வரை நீட்டிக்கப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

ii. அவசரக் காலங்களில் அத்தியாவசியப் பொருள்களை வாங்கி விநியோகம் செய்வதற்காக 50 கோடி ரூபாய் அளவில் விலை நிலைப்படுத்தல் நிதி ஒன்றினை இந்த அரசு ஏற்கெனவே அமைத்துள்ளது. **இந்த நிதியின் அளவு 100 கோடி ரூபாயாக உயர்த்தப்படும்.**

iii. **அரிசி விலையைக் கட்டுப்படுத்த, அமுதம் அங்காடிகள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சிறப்பு அங்காடிகள் மூலமாக ஒரு இலட்சம் மெட்ரிக் டன் அரிசியை கிலோ ஒன்றிற்கு 20 ரூபாய் என்ற விலையில் வெளிச்சந்தையில் விற்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.**

iv. **காய்கறி விலையைக் கட்டுப்படுத்த, நகர்ப்புரப் பகுதிகளில் கூட்டுறவு அமைப்புகள் மூலமும் தோட்டக்கலைத் துறை மூலமும் விவசாயிகளையும் நுகர்வோரையும் நேரடியாக இணைக்கக்கூடிய பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் (Farm Fresh Consumer Outlets) திறக்கப்படும்.**

## நீர் பாசனம்

**56.** தமிழ்நாடு கடைமடைப் பாசனப் பகுதியாக உள்ளதால், மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் வளங்களை பாதுகாப்பதற்காக ஓர் ஒருங்கிணைந்த திட்ட மேலாண்மை தேவைப்படுகிறது. மாநிலத்தின் விவசாயத்தில் பாசனத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு இந்த 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 3,314.50 கோடி ரூபாய் அளவிற்கு இத்துறைக்கு ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

**57.** காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள நிலையில், காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவையும் அமைப்பதற்காக இந்த அரசு உரிய முயற்சிகளை எடுத்து வருகிறது. இந்த அமைப்புகளை உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என மத்திய அரசிற்கு உத்தரவிடக் கோரி 18.3.2013 அன்று உச்ச நீதிமன்றத்தை இந்த அரசு அணுகியுள்ளது. வரும் ஆண்டிலிருந்து, தமிழ்நாட்டிற்கு காவேரி நீரில் உரிய பங்கினைப் பெற கர்நாடகத்தைக் கட்டாயப்படுத்த இது உறுதியாக வழிவகுக்கும்.

*நீர் வளப்பாதுகாப்பு*

**58.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு, 36,000 பாசன ஏரிகள் மற்றும் நீர்நிலைகளை புனரமைப்பதற்கான பணிகள் ஏற்கெனவே தொடங்கியுள்ளன. இவற்றில், 13,699 ஏரிகள் பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டிலும், எஞ்சியவை ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டிலும் உள்ளன. நீர்வள நிலவளத் திட்டம் மற்றும் ஏனைய திட்டங்களின் கீழ், 5,894 பொதுப்பணித் துறை ஏரிகள் சீரமைக்கப்பட்டு, அவற்றின் கொள்ளளவு ஏற்கெனவே உயர்த்தப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள சிறு பாசன ஏரிகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்ட நிதியைப் பயன்படுத்தி மேம்படுத்தப்படுகின்றன. மேலும், **பாரம்பரிய நீர்நிலைகளை மேம்படுத்துவதற்கான 176 திட்டப்பணிகள் 2013–2014 ஆம் ஆண்டில் 50 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.**

**59.** ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியோடு, பருவநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைப்பதற்காக, காவேரிப் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை 1,560 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த இந்த அரசு ஏற்கெனவே உத்தேசித்துள்ளது. காவிரிப் பாசனப் பகுதியில் உள்ள

கடைமடை நீர்த் தடுப்பு அமைப்புகள் மற்றும் வடிநீர் வாய்க்கால்கள் ஆகியவற்றைப் புனரமைப்பது இத்திட்டக் கூறுகளுள் அடங்கும்.

*பெரும் அணைகள் சீரமைப்பு*

**60.** அணைகள் சீரமைப்பு, மேம்படுத்துதல் திட்டத்திற்கான திட்ட ஒப்பந்தம் (Dam Rehabilitation and Improvement Project) ஏற்கெனவே உலக வங்கியுடன் கையெழுத்திடப்பட்டுள்ளது. இதன் மொத்தத் திட்ட மதிப்பீடு **745.49** கோடி ரூபாய். இதில் அணைப் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக **2013–2014** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் **390** கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*உள்நாட்டு ஆறுகள் இணைப்பு*

**61.** மாநிலத்திற்கு இடையே பாயும் பெரும் நதிகளை இணைப்பதற்கான திட்டங்களை செயல்படுத்த வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்தி வரும் அதே நேரத்தில், நமது மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைப்பதற்கான திட்டங்களை அரசு ஏற்கெனவே தொடங்கி செயல்படுத்தி வருகிறது. தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு இணைப்புத் திட்டம், கட்டளை கதவணையுடன் காவிரி–குண்டாறு இணைப்புத் திட்டம் ஆகியவற்றின் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாநில அரசின் இந்தத் திட்டங்களுக்கு **2013–2014** ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்டத்தில் **156.44** கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. **மூன்றாவது நதி இணைப்புத் திட்டமான பெண்ணையாறு–பாலாறு இணைப்புத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு விரைவில் தொடங்கும்.**

## சுற்றுச்சூழல் மற்றும் வனம்

62. விரைவான நகர்மயமாதல் மற்றும் தொழில் வளர்ச்சிக்கிடையில் வனங்களையும், சுற்றுச்சூழலையும் பாதுகாப்பதற்கு நமது மாநிலம் சிறப்பு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. 2012–2013 ஆம் ஆண்டிற்கான சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் ஒதுக்கீட்டை 15.89 சதவீதம் உயர்த்தி, 2013–2014 ஆம் ஆண்டிற்கு 880.69 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

63. மாநிலத்தின் பசுமைப் பரப்பை உயர்த்தவும், வறண்ட பகுதிகளில் மண் வளம் மற்றும் நீர் வளத்தைப் பாதுகாக்கவும், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 64–வது பிறந்த நாளை முன்னிட்டு, 2011–2012 ஆம் ஆண்டில் 64 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. 2012–2013 ஆம் ஆண்டில் 43.55 கோடி ரூபாய் செலவில் இச்சீரிய பணி தொடரப்பட்டுள்ளது. **மேலும், 65 இலட்சம் மரக்கன்றுகளை நட்டு இத்திட்டத்தை 2013–2014 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்துவோம்.**

*<u>சென்னையில் உள்ள ஆறுகள் மற்றும் நீர்வழித்தடங்களைச் சீரமைத்தல்</u>*

64. கடும் சுற்றுச்சூழல் மாசுபாட்டால், சென்னை பெருநகர்ப் பகுதியில் உள்ள, கூவம், அடையாறு மற்றும் கொசஸ்தலையாறு போன்ற ஆறுகள், பக்கிங்காம் கால்வாய் மற்றும் சிறு கால்வாய்கள் உள்ளிட்ட, 214 கிலோ மீட்டர் நீளமுள்ள நீர்வழித் தடங்களும், 42 நீர்நிலைகளும் மிகவும் சீர்கெட்டுள்ளன. இந்த நீர்வழித் தடங்கள், நீர்நிலைகள் ஆகியவற்றின் உயிரியல் சூழலை மீட்டெடுக்க (Eco restoration) இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. **நீர்ப்பிடிப்புப் பகுதிகளை மேம்படுத்துதல், தூர்வாருதல், மாசுபடுத்தும் வடிகால்களைத் தடுத்தல், கழிவுநீர் சுத்திகரிப்பு,**

**அறிவியல்பூர்வமான திடக்கழிவு மேலாண்மை, கரைகளைச் சீரமைத்து, நடைபாதைகள் மற்றும் பூங்காக்கள் அமைத்தல் ஆகியவை, நதிகள் மற்றும் நீர்நிலைகளின் உயிரியல் சூழல் மீட்டெடுத்தல் பணிகளில் அடங்கும். இப்பணிகளுக்கு அதிக நிதி தேவைப்படும் என்பதால், இதற்கான சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்த வெளிநாட்டு நிதியுதவி கோர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை (Chennai Rivers Restoration Trust) மூலம் செயல்படுத்தப்படும்.**

65. ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிதிநிறுவனத்தின் உதவியோடு செயல்படுத்தப்பட்டு வரும், தமிழ்நாடு பல்லுயிரினப் பாதுகாப்பு மற்றும் பசுமைத் திட்டம், 2013–2014 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2012–2013 ஆம் ஆண்டில், மாநிலத்தில் உள்ள தரமிழந்த வனப்பகுதிகளில் (Degraded forests) நீர்வளப் பாதுகாப்பு மற்றும் பசுமை மேம்பாட்டுத் திட்டம், நபார்டு வங்கியின் நிதியுதவியோடு 50 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2013–2014 ஆம் ஆண்டில் கூடுதலாக 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும்.**

*சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதி*

**66. 2012–2013 ஆம் ஆண்டில் பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி சாலைகளை அமைப்பதற்காக, சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதிக்கு 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. 2013–2014 ஆம் ஆண்டிலும் இந்நிதிக்கு 100 கோடி ரூபாய் மீண்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## தொழில் துறை

**67.** நமது நாட்டின் தொழில் உற்பத்தித் துறையில் தமிழ்நாட்டின் நிலை வலுவானதாக உருவெடுத்துள்ளது. வாகன உற்பத்தி, இரசாயனப் பொருட்கள், பெட்ரோலியப் பொருட்கள், உணவு பதப்படுத்துதல், மின்னணுப் பொருட்கள் உற்பத்தி, ஆகியவை மட்டுமன்றி புதிய தொழில்நுட்பங்களாகிய மென்பொருள் மற்றும் உயிரியியல் தொழில்நுட்பங்களிலும் முன்னணி மாநிலமாகத் தமிழகம் உருவெடுத்துள்ளது. தொழில் உற்பத்தித் துறையில் நமது நாட்டின் மொத்த உற்பத்தி அளவில், தமிழகத்தின் பங்கு சுமார் 10 சதவீதம் ஆகும்.

**68. மாநிலத்திற்கு மேலும் பல தொழிற்சாலைகளைக் கவரும் வகையில், சிப்காட் நிறுவனம் மூலமாக 25,000 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட நில வங்கியை இந்த அரசு ஏற்படுத்தும். தூத்துக்குடியில், பொதுத் துறை – தனியார் துறை பங்கேற்பு வாயிலாக, தமிழ்நாடு தொழில்வளர்ச்சி நிறுவனம் மூலம் புதிய கப்பல் கட்டும் தளம் ஒன்று அமைக்கப்படும்.**

**69.** 2013–2014 ஆம் ஆண்டில், மதுரை–தூத்துக்குடி தொழில் வழித்தடத்தை ஏற்படுத்திட இந்த அரசு ஆவன செய்யும். நான்கு உற்பத்தி மண்டலங்கள், ஒரு வேளாண் வணிக மண்டலம், இரண்டு வணிக முதலீட்டு மண்டலங்கள், ஒரு சிறப்புச் சுற்றுலா மண்டலம், ஒரு கிராமப்புறச் சுற்றுலா மையம் மற்றும் ஒரு அறிவுசார் மையம் ஆகியவற்றை அமைத்திட இத்திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. பத்தாண்டு காலத்திற்குள், 1,90,000 கோடி ரூபாய் தொழில் முதலீட்டை இத்திட்டம் ஈர்க்கும். **தொழில் துறையில் பின்தங்கியுள்ள தென் மாவட்டங்களில் முதலீடு செய்வதை ஊக்குவிக்கக் கூடிய புதிய சலுகைத் தொகுப்பு ஒன்று விரைவில் அறிவிக்கப்படும்.** அதிக முதலீடுகளை ஈர்த்து பொருளாதார

வளர்ச்சியையும், வேலைவாய்ப்பையும் உருவாக்குவதை இது உறுதி செய்யும்.

*<u>தமிழ்நாடு முதலீடு ஊக்குவிப்புத் திட்டம் (Tamil Nadu Investment Promotion Programme)</u>*

70. **ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிதி நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு முதலீடு ஊக்குவிப்புத் திட்டம், 2013–2014 ஆம் ஆண்டில் தொடங்கும். கொள்கை மாற்றங்கள் மூலமாகவும், கட்டமைப்பு குறைபாடுகளை நிவர்த்தி செய்தும், தொழில் முதலீட்டாளர்கள் சந்தித்துவரும் சில பிரச்சினைகளைக் களைவதை இத்திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது. சிறிய மற்றும் நடுத்தரக் கட்டமைப்புத் திட்டங்களுக்காக வரும் மூன்றாண்டுகளில் 770 கோடி ரூபாய் முதலீட்டை இத்திட்டம் உறுதிப்படுத்தும்.**

## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள்

71. வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், தொழில் உற்பத்தியை உயர்த்துதல், ஏற்றுமதி செய்தல் ஆகியவற்றின் மூலமாக மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பெரும் பங்காற்றி வருகின்றன. உற்பத்தித் தொழிலுக்குத் தேவையான உபபொருட்களை உற்பத்தி செய்து தொழில் இணைப்பை வலுவாக்கி, உற்பத்தித் துறையின் வளர்ச்சியை உறுதிப்படுத்த இந்த நிறுவனங்கள் அவசியமானதாகும். **2013–2014 ஆம் ஆண்டில், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையின் வளர்ச்சியைத் தூண்டிப் புத்துயிரளிக்க, சிறப்பு சலுகைத் தொகுப்பு ஒன்றை அளித்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது. இத்தொகுப்பு விரைவில் அறிவிக்கப்படும்.**

*<u>புதிய தொழில்முனைவோர்–தொழில் வளர்ச்சித் திட்டம்</u>*

72. புதிய தொழில் முனைவோர் – தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டம் 2012–2013 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், பயிற்சி மற்றும் ஆலோசனை உதவிகளோடு, முதலீடுகளுக்கு 25 சதவீத முதலீட்டு மானியத்தையும் அரசு வழங்கி வருகிறது. 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், இதற்கென 100 கோடி ரூபாய் அளிக்கப்பட்டுள்ளதோடு, இதில் 50 சதவீதம் மகளிர் தொழில் முனைவோருக்காக தனி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுபோல, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மற்றும் வங்கிகள் மூலமாக, சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குப் பலன் அளிக்கும் மூன்று சதவீத வட்டி மானியத் திட்டத்திற்காக, 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தகவல் தொழில்நுட்பம்

73. தகவல் தொழில்நுட்பத் துறையில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான கட்டமைப்பு வசதிகளையும் மனித வளத்தையும் தமிழகம் பெற்றுள்ளது. அரசு நிறுவனங்கள் மூலமாக சென்னை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களாகிய திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, ஓசூர் மற்றும் சேலம் ஆகிய நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்பட்டு 18.5 இலட்சம் சதுர அடி அலுவலக இடவசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த இடவசதி முழுவதையும் தொழில் நிறுவனங்கள் பயன்படுத்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். **கிராமப்புற வணிகமுறை வெளிப்பணி மையங்களை (Rural Business Process Outsourcing Centres) ஊக்குவிக்க 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## கைத்தறி மற்றும் துணிநூல்

74. கைத்தறித் தொழிலுக்குப் புத்துயிரூட்டி, சீரமைத்து மேம்படுத்துவதற்கான திட்டத்தில், மாநில அரசின் பங்கான 21.32 கோடி ரூபாயையும் சேர்த்து, 97.83 கோடி ரூபாய்க்கு 2012–2013 ஆம் ஆண்டில் அனுமதியளிக்கப்பட்டது. மேலும், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு உதவும் வகையில், விலையில்லா வேட்டி சேலைகள் வழங்கும் திட்டத்தையும் அரசு செயல்படுத்தி வருகிறது. **2013–2014 ஆம் ஆண்டில், 1.72 கோடி வேட்டிகளையும் 1.73 கோடி சேலைகளையும், ரூபாய் 362.8 கோடி செலவில் இந்த அரசு கொள்முதல் செய்து விநியோகம் செய்யும்.** மேலும், 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், கைத்தறித் தள்ளுபடி மானியத்திற்காக 78.45 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதுபோல, காதி மற்றும் சர்வோதய சங்கங்களுக்கு தள்ளுபடி மானியமாக 12 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## நெடுஞ்சாலைகள்

75. 4,974 கிலோ மீட்டர் நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகள், 10,764 கிலோ மீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகள், 46,279 கிலோ மீட்டர் நீளமுள்ள முக்கிய மற்றும் இதர மாவட்டச் சாலைகளைக் கொண்ட தமிழ்நாட்டின் சாலைக் கட்டமைப்பு நமது நாட்டிலேயே நீளமான அமைப்புகளில் ஒன்றாகும். பல ஆண்டுகளாக, இந்தச் சாலைகளில் வாகனப் போக்குவரத்து பன்மடங்கு உயர்ந்துள்ளது. **இதனால் ஏற்படும் தேவைகளின் உயர்வைக் கருத்தில் கொண்டு, 2012–2013 ஆம் ஆண்டில் 5,615.71 கோடி ரூபாயாக இருந்த நெடுஞ்சாலைத் துறைக்கான நிதியொதுக்கீட்டை, 2013–2014 ஆம் ஆண்டில் 6,452.77 கோடி ரூபாயாக இந்த அரசு உயர்த்தியுள்ளது.**

<u>*தர உறுதி – உலகத் தரத்தில் சாலைப் பராமரிப்பு*</u>

76. படிப்படியாக சாலைகளின் தரத்தை உயர்த்தவும், வலுப்படுத்தவும் இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. **2013–2014 ஆம் ஆண்டில், 168 கிலோ மீட்டர் நீளமுள்ள இடைவழித்தட (Intermediate lane) மாநில நெடுஞ்சாலைகள் இருவழித்தட சாலைகளாகவும், 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள ஒருவழித்தட முக்கிய மாவட்டச் சாலைகள், இடைவழித் தடங்களாகவும், ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தரம் உயர்த்தப்படும். இதுமட்டுமன்றி, 3,500 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மேலும் வலுப்படுத்தப்படும். 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்காக 2,032 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.**

77. 2012–2013 ஆம் ஆண்டில் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் 235 கோடி ரூபாய் செலவில் 121 பாலங்களை அமைக்கவும், 211.60 கோடி ரூபாய் செலவில் 433.72 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளைப் புதுப்பிக்கவும், இந்த அரசு அனுமதியளித்துள்ளது. 2013–2014 ஆம் ஆண்டில், நபார்டு வங்கியின் உதவியுடன் பல்வேறு சாலைப்பணிகளை மேற்கொள்வதற்காக 191.60 கோடி ரூபாயும், பாலங்கள் அமைக்கும் பணிகளுக்காக 233 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. **பொள்ளாச்சி உபகோட்டத்தில் சோதனை அளவில் செயல்படுத்தப்பட்டு வரும் செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தமுறை (Performance Based Maintenance Contract) மற்ற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.**

78. விரைவாகப் பயணம் செய்வதற்கு புறவழிச் சாலைகளும், மாநகர வட்டச் சாலைகளும் கூடுதலாகத் தேவைப்படுகின்றன. தற்போது

28 புறவழிச் சாலைகளும் மூன்று வட்டச் சாலைகளும் அமைப்பதற்காக 436.08 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் நடைபெற்று வருகின்றன. **சென்னையிலிருந்து மாமல்லபுரம் வரை கிழக்குக் கடற்கரைச்சாலையை நான்கு வழிச் சாலையாக தரம் உயர்த்துவதற்கான பணிகள் 2013–2014 ஆம் ஆண்டில் தொடங்கி செயல்படுத்தப்படும்.**

**79. சென்னை மாநகரப் போக்குவரவு மற்றும் போக்குவரத்து ஆய்வுப் பரிந்துரைகளின் (Chennai City Traffic and Transportation Study) அடிப்படையில், 2013–2014 ஆம் ஆண்டில் சென்னை மாநகரத்தில் 271.68 கோடி ரூபாய் செலவில் நான்கு பெரு மேம்பாலங்கள் அமைக்கப்படும். இதுபோன்றே, 2013–2014 ஆம் ஆண்டில் மதுரை நகரத்தில் உள்ள காளவாசலிலும், கோரிப்பாளையத்திலும் 130 கோடி ரூபாய் செலவில் இரண்டு மேம்பாலங்கள் அமைப்பதற்கான பணிகளும் மேற்கொள்ளப்படும்.**

*தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–2*

**80.** எனது முந்தைய நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறே, **தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாவது கட்டப்பணிகளுக்கு மத்திய அரசு மற்றும் உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இத்திட்டத்தில் 8,580 கோடி ரூபாய் செலவில், 1,678 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள், மேம்படுத்தப்படும். இதுவரை மாநில அரசால் செயல்படுத்தப்பட்டுள்ள வெளிநாட்டு உதவிபெறும் திட்டங்களில் இது மிகப் பெரிய திட்டமாகும். இத்திட்டம், அதிக போக்குவரத்து உள்ள சாலை இணைப்புகளை தரம் உயர்த்தி மேம்படுத்தும். இதற்கான பணிகள் 2013–2014 ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.**

*<u>மாநில நெடுஞ்சாலை வளர்ச்சி ஆணையம்</u>*

81. **தேசிய நெடுஞ்சாலை ஆணையம் போன்றே, தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையம் என்ற புதிய அமைப்பு உருவாக்கப்படும். முக்கிய மாநில நெடுஞ்சாலைகள் இதன் வசம் ஒப்படைக்கப்பட்டு, அவற்றை சர்வதேச தரத்தில் மேம்படுத்தி, பராமரித்து, மேலாண்மை செய்ய சிறப்பு கவனம் செலுத்தப்படும்.**

## போக்குவரத்து

82. இந்த அரசு பதவியேற்றதிலிருந்து 1,026 கோடி ரூபாய் செலவில் 6,000 புதிய பேருந்துகளை வாங்க அனுமதியளித்துள்ளது. இவற்றில், 2,855 பேருந்துகள் ஏற்கெனவே பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இது, பேருந்துகளின் சராசரி வயதை பெருமளவு குறைத்துள்ளது. இதனால், ஒரு லிட்டர் எரிபொருளுக்கு பேருந்துகள் செல்லக்கூடிய கிலோ மீட்டர் தூரக் குறியீடும் அதிகரித்துள்ளது. மாநிலப் போக்குவரத்துக் கழகங்களின் ஒட்டுமொத்த இழப்பு இன்னும் மிக அதிகமாக உள்ளதால், இப்பிரச்சினையை முழுமையான முறையில் தீர்க்க வேண்டியுள்ளது. **இதற்காக, பல்வேறு மாநில போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்க, உயர்மட்ட வல்லுநர் குழு ஒன்றை அமைக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது.**

*<u>போக்குவரத்துக் கழகங்களின் சுமையைத் தாங்குதல்</u>*

83. தவிர்க்க இயலாத கட்டண மாறுதல் மூலமாக அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் தாங்க முடியாத நிதி இழப்பை, இந்த அரசு சரிசெய்ய முனைந்தது. எனினும், மத்திய அரசின் நியாயமற்ற,

பிற்போக்கான, டீசலுக்கான இரட்டை விலைக் கொள்கையினாலும், அடிக்கடி டீசல் விலையை உயர்த்தியதாலும், இந்த கழகங்களின் நிதிநிலையில் மீண்டும் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. 2012–2013 ஆம் ஆண்டில் இச்சுமையை மக்களின் மீது சுமத்தாமல் இருக்க போக்குவரத்துக் கழகங்களின் கூடுதல் எரிபொருள் செலவை ஈடுசெய்ய 200 கோடி ரூபாய் இந்த அரசு ஒதுக்கீடு செய்தது. 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், கூடுதல் எரிபொருள் செலவை ஈடுசெய்ய 500 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

*ஒருங்கிணைந்த புறநகர் போக்குவரத்து*

84. விரைவான நகரமயமாதலால், சிறந்த, வேகமான, கூடுதல் திறன்மிக்க போக்குவரத்து அமைப்பிற்கான தேவை அதிகரித்து வருகிறது. திறன்மிக்க நகர்ப்புர திட்டமிடலுக்கு, பேருந்துகள், புறநகர் இரயில்கள், மெட்ரோ இரயில், மோனோ இரயில், புதுமையான விரைவுப் பேருந்து போக்குவரத்து அமைப்பு போன்ற **பல்வேறு போக்குவரத்து முறைகளைக் கொண்ட கூட்டு அமைப்பு தேவைப்படுகிறது. 2013–2014 ஆம் ஆண்டில், சென்னை மாநகரத்தில் உள்ள பல்வேறு போக்குவரத்து முறைகளை ஒருங்கிணைப்பது குறித்தான ஆய்வுப் பணியினை இந்த அரசு மேற்கொள்ளும்.** இந்த வரவு–செலவுத் திட்டத்தில் மெட்ரோ இரயில் திட்டத்திற்காக 750 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மின்சாரம்**

85. மின்சார விநியோகத்தை மேம்படுத்தி, நுகர்வோருக்கு தடையில்லாத, தரமுள்ள மின்சாரத்தை அளித்திட இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான நிறுவனமும், தேசிய அனல்மின் நிறுவனமும் இணைந்து

செயல்படுத்திவரும் வல்லூர் மின் உற்பத்தித் திட்டத்தில் 500 மெகாவாட் திறன் கொண்ட முதல் அலகு ஏற்கெனவே செயல்படத் தொடங்கி, மின் உற்பத்தியை நிலைப்படுத்தியுள்ளது. மேட்டூர் அனல்மின் உற்பத்தி மூன்றாம் நிலை திட்டத்தின் 600 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட அலகும், மேற்கூறிய வல்லூர் கூட்டுத் திட்டத்தின் இரண்டாவது அலகும், வட சென்னை இரண்டாம் நிலை அனல்மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாவது அலகும், சோதனை முறையில் செயல்படத் தொடங்கியுள்ளன. மேற்கூறிய, வட சென்னை மின்உற்பத்தித் திட்டத்தின் 600 மெகாவாட் முதல் அலகு, வரும் மே மாதம் முதலும், வல்லூர் கூட்டுத் திட்டத்தின் மூன்றாவது 500 மெகாவாட் அலகு, வரும் அக்டோபர் மாதம் முதலும் செயல்படத் தொடங்கும். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான நிறுவனமும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனமும் இணைந்து, தூத்துக்குடியில் அமைத்துவரும் மின் உற்பத்தித் திட்டத்தின், தலா 500 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அலகுகள், முறையே 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலும், 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலும் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த புதிய திட்டங்கள் 3,230 மெகாவாட் அளவிலான கூடுதல் மின்உற்பத்தியை அளிக்கும்.

**86.** ஏற்கெனவே அறிவித்தவாறு, மொத்தம் 21,000 கோடி ரூபாய் முதலீட்டில் செயல்படுத்தப்பட உள்ள புதிய மின் உற்பத்தித் திட்டங்களான, 660 மெகாவாட் எண்ணூர் விரிவாக்கத் திட்டம், இரண்டு 660 மெகாவாட் அலகுகள் கொண்ட எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டம், இரண்டு 660 மெகாவாட் அலகுகள் கொண்ட உடன்குடி மின் உற்பத்தித் திட்டம் ஆகியவற்றிற்கான பணிகள் வரும் 2013–2014 ஆம் ஆண்டில் தொடங்கும். எதிர்கால மின் தேவைகளைக்

கருத்தில் கொண்டு, தேவைப்படக்கூடிய புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான இந்த அரசின் முயற்சிகள் தொடரும்.

*புதுப்பிக்கத்தக்க எரிசக்தி – புதிய வாய்ப்புகள்*

**87.** நமது நாட்டிலேயே மிக அதிக அளவிலான புதுப்பிக்கத்தக்க மின்சக்தி உற்பத்தித் திறன் தமிழகத்தில்தான் உள்ளது. மாநிலத்தின் மொத்த மின் நுகர்வில் 12.6 சதவீதம் காற்றாலை உற்பத்தியிலிருந்து மட்டுமே கிடைக்கப்பெறுகிறது. மேலும், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் உள்ள கரும்பு அரவைக் கழிவிலிருந்து 183 மெகாவாட் மின் உற்பத்தி செய்வதற்கான முன்னோடித் திட்டங்களைத் தமிழகம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டங்கள் 2013–2014 ஆம் ஆண்டிலிருந்து செயல்படத் தொடங்கும். இந்த நிதியாண்டில், இந்த மின் உற்பத்தித் திட்டங்களைச் செயல்படுத்த பல்வேறு சர்க்கரை ஆலைகளுக்கு குறுகிய காலக் கடனாக 352 கோடி ரூபாய் வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**88.** அண்மையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டு சூரிய மின் சக்திக் கொள்கையின்படி, 1,000 மெகாவாட் சூரிய மின் உற்பத்தியை அளிப்பதற்கான ஒப்பந்தப்புள்ளிகளை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான நிறுவனம் கோரியது. இந்த ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ், 226 மெகாவாட் உற்பத்தி செய்வதற்கான ஒப்பந்தங்கள் மின் உற்பத்தியாளர்களுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன. **அத்துடன், தற்போதுள்ள அரசுக் கட்டடங்களில் சூரிய மின் உற்பத்தி கருவிகளை நிறுவுவதற்காக, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஐந்து இலட்சம் ரூபாயை**

**தனியாக ஒதுக்கீடு செய்து, மொத்தமாக 11.70 கோடி ரூபாய் செலவிடப்படும்.**

*நிதி மறுசீரமைப்புத் திட்டம்*

**89.** தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மோசமான நிதிநிலையைச் சரிசெய்யும் பொருட்டு நிதிநிலை மறுசீரமைப்புத் திட்டத்திற்கு (Financial Restructuring Plan) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். **இந்த மறு சீரமைப்புத் திட்டத்தின் கீழ், 12,211 கோடி ரூபாய் அளவிலான இந்த நிறுவனத்தின் குறுகிய கால கடன் பொறுப்புகளில், 50 சதவீதத் தொகையை அரசு ஏற்றுக்கொள்ளும். 2012–2013 ஆம் ஆண்டிலிருந்து இந்த நிறுவனத்திற்கு ஏற்படும் பண இழப்பில் ஒரு பகுதிக்கான நிதியையும் அரசு வழங்கும்.**

**90.** இந்த அரசு பொறுப்பேற்ற போது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான நிறுவனத்தின் கடன் அளவு 45,000 கோடி ரூபாயாக இருந்தது. கடனில் மூழ்கியதால், மின் உற்பத்தியை உயர்த்துவதற்கான எந்த ஒரு முயற்சியையும் மேற்கொள்வதற்கு நிதி ஆதாரம் இடமளிக்கவில்லை. இந்த மோசமான நிதிநிலையில் இருந்து நிறுவனத்தை மீட்பதற்காக, 2011–2012 ஆம் ஆண்டில் 7,913.35 கோடி ரூபாய் மொத்த நிதி உதவியை அரசு அளித்தது. 2012–2013 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான நிறுவனத்திற்காக 11,242 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுமட்டுமன்றி, கிராமப்புற மின்மயமாக்கல் நிறுவனத்திடமிருந்தும், மின்சார நிதி நிறுவனத்திடமிருந்தும் 10,000 கோடி ரூபாய் கடன் பெறுவதற்கான காப்புறுதியையும் இந்த அரசு ஏற்கெனவே வழங்கியுள்ளது. **மின்சார மானியம் 5,197 கோடி ரூபாயையும் சேர்த்து,**

**2013–2014 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான நிறுவனத்திற்காக, மொத்தம் 12,197 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.**

**சுற்றுலா**

91. 2012–2013 ஆம் ஆண்டிலிருந்து ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியோடு, கிழக்குச் சுற்றுலா சுற்றமைப்பு மற்றும் தென்னகச் சுற்றுலா சுற்றமைப்பு ஆகியவற்றில் உள்ள குறிப்பிட்ட சுற்றுலாத் தலங்களின் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான சிறப்புத் திட்டம், 450 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2013–2014 ஆம் ஆண்டில், தேர்வு செய்யப்பட்ட சுற்றுலா மையங்களில் அடிப்படை வசதிகளை இத்திட்டத்தின் மூலம் மேம்படுத்த 67.91 கோடி ரூபாய் அளவிலான பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், "தமிழ்நாட்டிற்கு செல்வோம் 2014" என்ற உத்தியின் அடிப்படையில் சுற்றுலா மேம்பாட்டிற்கான விளம்பரப் பணிகளை மேற்கொள்ள 10 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் சுற்றுலாத் துறைக்காக 153.95 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

92. **மீன்வளத் துறையின் தொழில்நுட்ப உதவியோடு, பொதுத் துறை – தனியார் துறை பங்கேற்புடன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலமாக, மாமல்லபுரத்தில் உலகத்தரத்திலான கடல்வாழ் உயிரினக் காட்சியகம் (oceanarium) 250 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.** அரியலூரில் ஒரு புதிய தொல்படிவப் பொருள் அருங்காட்சியகம் இரண்டு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். மாநிலத்தில் சுற்றுலா வாய்ப்புகளை அதிகரிக்க இம்முயற்சிகள் மேலும் உதவும்.

## தமிழ் வளர்ச்சி

93. தமிழ் வளர்ச்சித் துறைக்கென 2013–2014 ஆம் ஆண்டிற்கு இந்த அரசு 39.29 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. **தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தற்போதுள்ள கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக ஒரு சிறப்பு மானியமாக இரண்டு கோடி ரூபாய் வழங்கப்படும்.**

## சுகாதாரம் மற்றும் குடும்ப நலன்

94. பல்வேறு மருத்துவக் குறியீடுகளில் தமிழகம் தனது முன்னணி நிலையைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டுள்ளது. சிறப்பான பிறப்பு மற்றும் இறப்புப் பதிவு முறை, தடுப்பூசி போடுதல், அடிப்படை பேறுகால வசதிகள், சிறந்த பள்ளிச் சுகாதாரத் திட்டம் ஆகியவற்றைக் கொண்டு சிறப்பாகச் செயல்படக்கூடிய பொதுச் சுகாதார அமைப்பினை ஏற்படுத்த எடுக்கப்பட்டுள்ள தன்னிகரில்லா முயற்சிகள் பல்வேறு மன்றங்களில் பாராட்டப்பட்டுள்ளன. இத்துறைக்காக 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 6,511.76 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

95. பேறுகாலத்திற்கு முந்தைய சிகிச்சைக்கான பதிவு முறையையும், பல்வேறு அரசு மருத்துவமனைகளில் நடக்கும் மகப்பேறுகளின் எண்ணிக்கையையும் உயர்த்த, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டம் பேருதவி புரிந்துள்ளது. இந்தியாவிலேயே மிக அதிக அளவாக, தமிழகத்தில் 99.8 சதவீத பிரசவங்கள் மருத்துவமனைகளில் நடைபெறுகின்றன. 2012–2013 ஆம் ஆண்டில், 6,23,795 பயனாளிகளுக்கு, மொத்த நிதியுதவியாக 597.48 கோடி ரூபாய் இத்திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. 2013–2014 ஆம்

ஆண்டில், இத்திட்டத்திற்காக 720 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

96. இதுவரை, 623.58 கோடி ரூபாய் அளவில், 2,84,228 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் பயனளித்துள்ளது. வரும் ஆண்டில் இத்திட்டத்திற்காக 750 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

97. மருத்துவமனைகளுக்கு இலவசமாக சென்று வர உதவும், 108 மருத்துவ ஊர்தித் திட்டம் மூலமாகவும், அரசு மருத்துவ ஊர்திகள் மூலமாகவும் இதுவரை 1,59,899 பேறுகாலத் தாய்மார்கள் மற்றும் 15,365 நோய்வாய்ப்பட்ட பச்சிளங் குழந்தைகள் உட்பட, 6,40,000 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர். இத்திட்டத்திற்காக, 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 77.59 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

98. ஆரம்ப சுகாதாரத்திற்கு தனிக் கவனம் அளிக்கக்கூடிய தேசிய ஊரக சுகாதார இயக்கம் (National Rural Health Mission), 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இருபத்துநான்கு மணி நேரமும் மருத்துவர்கள் இருக்கச் செய்தல், அறுவை சிகிச்சை அறை, இரத்த சேமிப்பு மையம் மற்றும் பல் மருத்துவச் சேவை ஆகியவற்றுடன் செயல்படக்கூடிய 30 படுக்கை வசதி கொண்ட, தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களை, ஒவ்வொரு வட்டாரத்திலும் ஏற்படுத்திட இலக்கிடப்பட்டுள்ளது. நகர்ப்புரப் பகுதிகளிலும், மருத்துவ வசதிகளை அளித்திட 2012–2013 ஆம் ஆண்டிலிருந்து 135 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களையும் இந்த அரசு தொடங்கியுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச்

செயல்படுத்திட மாநில சுகாதார சங்கம் மூலம் **1,400** கோடி ரூபாய் செலவிடப்படும்.

*<u>தொற்று அல்லாத நோய்கள் மீது சிறப்புக் கவனம்</u>*

**99.** **2005** ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டம் (Tamil Nadu Health Systems Project), செயல்படுத்தப்பட்டு வருகிறது. கர்ப்பப்பை புற்று நோயையும் மார்பகப் புற்றுநோயையும் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்கும், இதய நோய் மற்றும் சர்க்கரை நோய் ஆகியன ஏற்படாமல் தடுத்து கட்டுப்படுத்துவதற்கும், தொற்று அல்லாத நோய்களுக்கான ஒரு பெரும் சிறப்புத் திட்டத்தை தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டம், செயல்படுத்தி வருகிறது. **125** மருத்துவமனைகளில், **24** மணி நேர விரிவான அவசரகால மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல சேவை வசதிகளும் இத்திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இணைய அடிப்படையிலான மருத்துவ மேலாண்மைத் தகவல் முறையும், (Health Management Information System) மருத்துவமனை மேலாண்மை முறையும் (Hospital Management System) செயல்படுத்தப்பட்டுள்ளது. **2013–2014** ஆம் ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்த **117.93** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**100.** மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றில் மண்டல புற்றுநோய் சிகிச்சை மையங்கள் அமைத்திட, ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. **முப்பது கோடி ரூபாய் செலவில் தஞ்சை மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், மேலும் இரண்டு மண்டல புற்றுநோய் சிகிச்சை மையங்களை அமைத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது.** வட்ட, மாவட்ட மற்றும் மருத்துவக் கல்லூரி

மருத்துவமனைகளில் உள்ள கட்டமைப்பு வசதிகளை இந்த அரசு தொடர்ந்து வலுப்படுத்தும். **2013–2014 ஆம் ஆண்டில், மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள அறுவைச் சிகிச்சை அரங்குகள் 20 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும்.**

*<u>இந்திய பாரம்பரிய மருத்துவ முறைகள்</u>*

101. ஆயுஷ் (ஆயுர்வேதம், யோகா, யுனானி, சித்தா மற்றும் ஓமியோபதி) மருத்துவ முறைகள், நோய்த் தடுப்பு மற்றும் நோய் தீர்வு ஆகிய இரு வழிகளிலும் முழுமையான மருத்துவ சிகிச்சையை அளிக்கின்றன. சித்த மருத்துவ முறையானது நமது தமிழ் மூதாதையர்கள் உலகிற்கு அளித்த தனிப்பெரும் கொடையாகும். இன்றைய தலைமுறையினருக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் பயனளிக்கும் வகையில் இந்தப் பாரம்பரிய ஞான அமுதைப் பாதுகாத்திட இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. **பாரம்பரிய இந்திய மருத்துவ முறைகளை வலுப்படுத்தி பிரபலப்படுத்திட வேண்டும் என்பது இந்த அரசின் பேரவா. இதற்கான சிறப்பு நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனியே அறிவிப்பார்கள்.** 2013–2014 ஆம் ஆண்டிற்கு இந்திய மருத்துவத் துறைக்கு 169.13 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## பள்ளிக் கல்வி

102. அனைத்துத் துறைகளிலும் மிக உயர்ந்த ஒதுக்கீடாக பள்ளிக் கல்வித் துறைக்கு, 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 16,965.30 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வி

அளிப்பதற்கான சட்ட விதிகளை அரசிதழில் வெளியிட்ட முதல் மாநிலங்களுள் தமிழகமும் ஒன்றாகும். கல்வி கற்பதற்கான உரிமைக் குறியீடுகளை எய்துவதில், குறிப்பாக, மொத்தப் பள்ளிச் சேர்க்கை மற்றும் இடைநிற்றல் அளவுகளில், மிகச் சிறப்பாகக் கருதப்படும் மாநிலங்களுள் தமிழகமும் ஒன்று என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் நான் பெருமை கொள்கிறேன். 2011 ஆம் ஆண்டு, இந்த அரசு நிருவாகப் பொறுப்பேற்ற பின்னர், 51,757 ஆசிரியர்களும், 7,275 ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இடைநிற்றலைக் குறைத்து மேல்நிலைப் பள்ளி அளவில் மாணவர்கள் தக்கவைப்பு விகிதத்தை உயர்த்துவதற்காக 10, 11, மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ மாணவியர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகையை இந்த அரசு வழங்கி வருகிறது. **2013–2014 ஆம் ஆண்டு 381 கோடி ரூபாய் அளவிலான பணப் பயனை 24.76 இலட்சம் மாணவ மாணவியர்கள் பெறுவார்கள்.**

103. கூடுதல் வகுப்பறைகள், குடிநீர் வசதிகள் போன்ற பள்ளிகளுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை அனைவருக்கும் கல்வித் திட்டம், தேசிய இடைநிலைக் கல்வித் திட்டம் மற்றும் நபார்டு வங்கி நிதியுதவி ஆகியவற்றின் மூலம், இந்த அரசு தொடர்ந்து அமைக்கும். 2012–2013 ஆம் ஆண்டு மேற்கூறிய திட்டங்களுக்காக 1,684.20 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. **2013–2014 ஆம் ஆண்டிற்கு அனைவருக்கும் கல்வித் திட்டத்திற்கு 700 கோடி ரூபாயும், தேசிய இடைநிலைக் கல்வித் திட்டத்திற்கு 366.57 கோடி ரூபாயும், நபார்டு நிதியுதவி திட்டங்களுக்கு 293 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

104. பள்ளிகளைத் தரம் உயர்த்தியதாலும் அதிகரித்துள்ள மாணவர்களின் எண்ணிக்கையாலும் 2,733 பள்ளிகளுக்குக் கூடுதல் கழிப்பறை வசதிகளும், குடிநீர் வசதிகளும் ஏற்படுத்த வேண்டியுள்ளது.

இந்த வசதிகளை ஏற்படுத்துவதற்காக ஊரக வளர்ச்சித் திட்டங்கள், அடிப்படைத் தேவைகள் திட்டம், தேசிய ஊரகக் குடிநீர் திட்டம் ஆகியவற்றின் மூலமாகக் கிடைக்கும் நிதியுடன், கூடுதலாகத் தேவைப்படும் நிதிக்காக, நபார்டு நிதியுதவி திட்டத்தின் கீழ் 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **2013–2014 ஆம் ஆண்டின் இறுதிக்குள் அனைத்துப் பள்ளிகளிலும் 100 சதவீத பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியுடன் கழிப்பறை வசதிகளும் கிடைப்பதை இது உறுதி செய்யும்.**

<u>*கல்வி கற்க சிறந்த சூழலை உருவாக்குதல்*</u>

105. சிறப்பாகக் கல்வி கற்க உகந்த சூழலை ஏற்படுத்திடத் தேவையான அனைத்து தேவைகளையும் இந்த அரசு நிறைவு செய்து வருகிறது. 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் கீழ்க்கண்ட ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

i. 97.70 இலட்சம் மாணவ மாணவியருக்கு புத்தகங்கள் வழங்குவதற்காக 217.22 கோடி ரூபாய்.

ii. 86.71 இலட்சம் மாணவ மாணவியருக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்குவதற்காக 110.96 கோடி ரூபாய்.

iii. 14.02 இலட்சம் மாணவ மாணவியருக்கு இலவசப் பேருந்து பயணச் சலுகை வழங்குவதற்காக 323.70 கோடி ரூபாய்.

iv. 53.53 இலட்சம் மாணவ மாணவியருக்கு நான்கு சீருடைத் தொகுப்புகள் வழங்குவதற்காக 353.22 கோடி ரூபாய்.

v. 13 இலட்சம் மாணவ மாணவியருக்கு பள்ளிப் புத்தகப் பைகள் வழங்குவதற்காக 19.79 கோடி ரூபாய்.

vi. **6.1** இலட்சம் மாணவ மாணவியருக்கு காலணிகள் வழங்குவதற்காக **8.47** கோடி ரூபாய்.

vii. **9.67** இலட்சம் மாணவ மாணவியருக்கு வடிவியல் பெட்டிகள், வரைபடப் புத்தகங்கள் போன்றவை வழங்குவதற்காக **6.65** கோடி ரூபாய்.

viii. **6.03** இலட்சம் மாணவ மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்குவதற்காக **200.98** கோடி ரூபாய்.

ix. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படி, **2013–2014** ஆம் ஆண்டில், மலைப் பகுதிகளில் படிக்கும் **10.30** இலட்சம் மாணவ மாணவியருக்கு கம்பளி ஆடைகள் வழங்க **4.12** கோடி ரூபாய்.

x. **32.79** இலட்சம் மாணவியர்களுக்கு சானிடரி நாப்கின்கள் வழங்க **54.63** கோடி ரூபாய்.

இப்பயன்களை, மாணவ மாணவியர்களுக்கு அளித்திட, மாநில அரசுக்கு மொத்தமாக **1,299.74** கோடி ரூபாய் செலவு ஏற்படும்.

## உயர் கல்வி

**106.** கடந்த இரண்டாண்டுகளில் இந்த அரசு **22** புதிய கலை–அறிவியல் கல்லூரிகளையும், ஒரு அரசுப் பொறியியல் கல்லூரியையும் திறந்துள்ளது. மேலும், பத்து புதிய அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளையும், இரண்டு புதிய அரசுப் பொறியியல் கல்லூரிகளையும் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. **2013–2014** ஆம் கல்வியாண்டில் இந்திய தகவல் தொழில்நுட்ப ஆய்வு நிறுவனம், பாரதிதாசன் தொழில்நுட்ப நிறுவன வளாகத்தில் செயல்படத் தொடங்கும். மாண்புமிகு முதலமைச்சர் ஏற்கெனவே அறிவித்தவாறு

கூடுதலாக எட்டு கலை—அறிவியல் கல்லூரிகள், 2013—2014 ஆம் ஆண்டிலிருந்து செயல்படத் தொடங்கும்.

107. 2010—2011 ஆம் ஆண்டில், 6,09,915 ஆக இருந்த உயர் கல்வி மாணவர்களின் சேர்க்கை, 2012—2013 ஆம் ஆண்டில், 6,51,807 ஆக உயர்ந்துள்ளது. 2012—2013 ஆம் ஆண்டில் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு கல்விக் கட்டணத்தை அளிக்கும் திட்டத்தின் மூலம் 518 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 2013—2014 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு கணிசமாக உயர்த்தப்பட்டு, 673 கோடி ரூபாயாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

## தகவல் தொழில்நுட்ப யுகத்திற்கு இளைஞர்களைத் தயார்படுத்துதல்

108. மாநிலத்தில் தரமான மனித ஆற்றலை வளர்ப்பதில் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் பெரும் பங்கு வகிக்கிறது. வளரும் சமுதாயத்தில் காணப்படும் தொழில்நுட்ப இடைவெளி இத்திட்டத்தின் மூலம் நிரப்பப்படுவதை நமது மாநிலம் உறுதி செய்துவருகிறது. **2013—2014 ஆம் ஆண்டில் மாணவர்களுக்கு 5.65 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கப்படும். 2013—2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 1,500 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.**

## விளையாட்டு மேம்பாடு

109. விளையாட்டுக்கு ஊக்கம் அளிப்பதை இளைஞர்களின் முழுமையான வளர்ச்சிக்கு வழிவகுக்கும் முக்கியமான கருவியாக அரசு கருதுகிறது. 2012—2013 ஆம் ஆண்டு சென்னையில் புதிய ஓடுதளங்கள் அமைக்கவும், நேரு விளையாட்டு அரங்கத்தை மேம்படுத்தவும்

40 கோடி ரூபாய் இந்த அரசு அனுமதியளித்தது. **2010–2011** ஆம் ஆண்டில் **31.26** கோடி ரூபாயாக இருந்த விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் துறைக்கான மொத்த ஒதுக்கீடு, **2013–2014** ஆம் ஆண்டில் **112.50** கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. தங்கும் விடுதிகள், ஓடுதளங்கள், விளையாட்டு அரங்கங்கள் போன்ற விளையாட்டுக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு இந்த அரசு சிறப்பு முக்கியத்துவம் அளித்துவருகிறது. இந்த முயற்சிகள் வரும் ஆண்டிலும் தொடரும்.

**மாநில நிதி ஆணையம்**

**110.** நான்காவது மாநில நிதி ஆணையம் தனது அறிக்கையை மாநில அரசுக்கு ஏற்கெனவே அளித்துள்ளது. இந்த அறிக்கையையும், இதன் பரிந்துரைகளின்மீது இந்த அரசு எடுத்துள்ள முடிவுகள் குறித்தும் விளக்கும் நடவடிக்கைக் குறிப்பு, இந்த கூட்டத் தொடரிலேயே சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். நான்காவது மாநில நிதியாணையம் பரிந்துரைத்தவாறே சொந்த நிதி வருவாயில் **10** சதவீதம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும். **எனினும், கிராமப்புற மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே நிதி ஆதாரங்கள் 56 : 44 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என ஆணையம் பரிந்துரைத்துள்ள போதிலும், கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சிறப்புத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, தற்போது வழங்கப்படும் 58 : 42 என்ற விகிதத்திலேயே தொடர்ந்து நிதிப்பகிர்வு மேற்கொள்ளப்படும்.** இதன்படி, **2013–2014** ஆம் ஆண்டு நிதிப் பகிர்வு மானியத்தின் மூலமாக, கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள் **4,887.69** கோடி ரூபாய் நிதியைப் பெறும். நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் **3,539.36** கோடி ரூபாய் நிதியைப் பெறும். மொத்தமாக, **2013–2014** ஆம் ஆண்டில்,

மாநில அரசிடமிருந்து உள்ளாட்சி அமைப்புகள் நிதிப்பகிர்வு மானியமாக 8,427.05 கோடி ரூபாய் நிதியைப் பெறும்.

**ஊரக வளர்ச்சி**

*<u>தூய்மை கிராமங்கள்</u>*

**111.** நமது மாநிலத்தில் உள்ள அனைத்துக் கிராமங்களும் தூய்மையானதாகவும் துப்புரவுடனும் விளங்க வேண்டும் என்பது நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அவா. இதை நிறைவேற்ற, அனைத்து கிராமங்களிலும் நீடித்து நிலைக்கத்தக்க வகையில் திடக் கழிவு மேலாண்மை முறையை செயல்படுத்துவது அவசியம். 2003 ஆம் ஆண்டிலேயே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'தூய்மை கிராமம்' திட்டத்தை தொடங்கினார்கள். ஆனால், முந்தைய அரசால் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படவில்லை. இத்திட்டத்தை 2011–2012 ஆம் ஆண்டு முதல் இந்த அரசு, மீண்டும் உயிர்ப்பித்து செயல்படுத்தி வருகிறது. **மறு சுழற்சி முறை, கழிவுகளை அகற்றும் வசதிகளோடு கூடிய திடக்கழிவு மேலாண்மை முறை அனைத்துக் கிராமங்களிலும் ஏற்படுத்தப்படும். நகர்ப்புரங்களை ஒட்டியுள்ள கிராமங்கள், அந்த நகரங்களில் செயல்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்களில் பங்கு கொண்டு திடக்கழிவு மேலாண்மை முறையை செயல்படுத்தும். கழிவுகளைச் சேகரித்துக் கையாளும் செலவுகள் உள்ளிட்டு, இத்தகைய வசதிகளை ஏற்படுத்துவதற்காக நிதிப்பகிர்வுத் தொகையிலிருந்து, 150 கோடி ரூபாய் தனியாக ஒதுக்கீடு செய்யப்படும்.** மேலும், 2013–2014 ஆம் ஆண்டில் 'தூய்மை பாரதம்' திட்டத்தில் கிடைக்கக்கூடிய 97.85 கோடி ரூபாய் நிதியும், திடக்கழிவு, கழிவு நீர் மேலாண்மைப் பணிகளுக்காக பயன்படுத்தப்படும்.

*ஊரக வீட்டுவசதி*

**112.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சூரிய ஒளி மின்வசதி கொண்ட பசுமை வீடுகள் திட்டம், நமது நாட்டிலேயே ஒரு முன்னோடி முயற்சியாகும். கடந்த இரண்டாண்டுகளில் 2,160 கோடி ரூபாய் செலவில் 1,20,000 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. **2013–2014 ஆம் ஆண்டிலும் 60,000 பசுமை வீடுகள் அமைக்கப்படும். மேலும், இந்திரா வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 2013–2014 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் வீடுகள் கட்டப்படும்.**

*கிராமப்புற உள்கட்டமைப்பு*

**113.** ஊரகக் குடியிருப்பை வளர்ச்சி அலகாகக் கருதி கவனம் செலுத்தக்கூடிய மாநிலம் தமிழகம் மட்டுமே. தமிழ்நாடு கிராமக் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் (THAI) இந்த அணுகுமுறைக்கான முக்கிய எடுத்துக்காட்டாகும். கடந்த இரண்டாண்டுகளில், இத்திட்டத்தில், 1,430 கோடி ரூபாய் செலவில் 96,508 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. **2013–2014 ஆம் ஆண்டில் 15,115 குடியிருப்புகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்திட 750 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

*சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி*

**114.** சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில், 2012–2013 ஆம் ஆண்டில் 470 கோடி ரூபாய் செலவில் 16,153 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2013–2014 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்திற்காக 470 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*<u>மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்</u>*

115. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ், மேற்கொள்ளப்பட்ட பணிகளை முடிப்பதிலும், மொத்தச் செலவினத்திலும், நமது நாட்டிலேயே முதல் மாநிலமாக தமிழகம் விளங்குகிறது. 2013–2014 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக நமது மாநிலத்திற்கு 6,341.80 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **1.4.2013–லிருந்து இத்திட்டத்தில் அளிக்கப்படும் தினக்கூலி 132 ரூபாயிலிருந்து 148 ரூபாயாக உயர்த்தப்படும். இது நடப்பாண்டில் வழங்கப்படுவதை விட 16 ரூபாய் கூடுதல் ஆகும்.**

*<u>ஊரகப் பகுதிகளுக்கு சாலை இணைப்பு</u>*

116. வேளாண் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு ஊரகச் சாலை இணைப்புகள் அவசியமானதாகும். 2012–2013 ஆம் ஆண்டில் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் 200 கோடி ரூபாய் செலவில் சாலைகள் மற்றும் பாலங்களை மேம்படுத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. **2013–2014 ஆம் ஆண்டில், பாரதப் பிரதமரின் கிராமச் சாலைகள் திட்டத்தின் 8–வது கட்டத்தின் கீழ், 3,095.77 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை, 1,130.10 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்த இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதில் 78.18 கோடி ரூபாய் செலவில் 45 பாலங்களையும், 772.97 கோடி ரூபாய் செலவில் 2,031.22 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளையும் மேம்படுத்துவதற்கான பணிகளை கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளும், 278.95 கோடி ரூபாய் செலவில் 1,064.55 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை மேம்படுத்துவதற்கான பணிகளை நெடுஞ்சாலைத் துறையும் மேற்கொள்ளும்.**

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்

**117.** வேகமான நகரமயமாதலால் அதிகரிக்கும் தேவைகளை நிறைவு செய்ய நீண்டகாலத் திட்டமிடுதலும், தொலைநோக்கும் தேவைப்படுகின்றன. எனவே, நகர்ப்புரங்களின் முக்கியக் கட்டமைப்புத் தேவைகளான சாலைகள், குடிநீர் வழங்கல், கழிவு நீர் அகற்றல், வடிகால் மேலாண்மை மற்றும் திடக்கழிவு மேலாண்மை போன்றவற்றை நிறைவு செய்வதற்கு இந்த அரசு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது.

<u>*மாநில சிறப்பு நோக்குத் திட்டங்கள் (State Mission Mode Programmes)*</u>

**118.** சாலை மேம்பாடு, குடிநீர் வழங்கல் திட்டங்கள், பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் ஆகியவற்றுடன், இதர முக்கியத் திட்டப் பணிகளையும் மேற்கொள்வதற்காக, கடந்த இரண்டாண்டுகளில் சென்னைப் பெருநகர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 1,000 கோடி ரூபாயும், ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 1,500 கோடி ரூபாயும் இந்த அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **2013 –2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலும் சென்னைப் பெருநகர் மேம்பாட்டு திட்டத்திற்காக 500 கோடி ரூபாயும், ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்திற்காக 750 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** கூடுதலான அளவில் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிதித் திறனை இந்த சிறப்பு ஒதுக்கீடுகள் வலுப்படுத்தியுள்ளன.

**119.** இத்தகைய, சிறப்பு நோக்குத் திட்டங்களில், கூடுதல் நிதியைத் திரட்டி, அதிக எண்ணிக்கையிலான திட்டப்பணிகளை மேற்கொள்வதற்காக, இனிவரும் காலங்களில் திட்டங்களின்

அடிப்படையில் (project based) இவற்றிற்கான ஒதுக்கீடு வழங்கப்படும். சென்னை மாநகராட்சி, நிதிநிலை வலுவாக உள்ள உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றுக்கு இத்திட்டத்தில் வழங்கப்படும் மானிய நிதியுதவி, திட்டப்பணிச் செலவில் அதிகபட்சம் 75 சதவீதம் மட்டுமே இருக்கும். எஞ்சிய 25 சதவீதம் நிதியை, அந்த உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு மூலமாகவோ அல்லது நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன் மூலமாகவோ திரட்டிப் பயன்படுத்தப்படும். நிதிநிலை வலுவிழந்துள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு மானிய அளவு 90 சதவீதமாக இருக்கும். எஞ்சிய 10 சதவீதம் சொந்த நிதி அல்லது கடன்கள் மூலமாகவோ அல்லது கட்டமைப்புப் பற்றாக்குறை நிறைவு நிதி மூலமாகவோ செலவிடப்படும்.

*திடக்கழிவு மற்றும் கழிவு நீர் மேலாண்மை*

**120.** நகர்ப்புரப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை முக்கியச் சவாலாக உள்ளது. குப்பைக் கிடங்குகளில் போடப்படும் குப்பை அளவை குறைத்திடும் வகையில், கழிவினை ஆரம்ப நிலையிலேயே பிரிப்பதற்கும், மறு சுழற்சி செய்வதற்கும் இந்த அரசு தொடர்ந்து ஊக்கம் அளிக்கும். சாத்தியக்கூறு உள்ள அனைத்து இடங்களிலும், கழிவிலிருந்து எரிசக்தி உற்பத்தி செய்யும் திட்டங்கள் அமைக்கப்படும். திருநெல்வேலி மாநகராட்சியில் 55 கோடி ரூபாய் செலவில், கழிவிலிருந்து எரிசக்தி உற்பத்திசெய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளவாறு, நிதித்திறன் வலுவாக இல்லாத நகராட்சிகளில் திடக்கழிவுத் திட்டப்பணிகளை செயல்படுத்த 2013–2014 ஆம் ஆண்டில், ஒரு சிறப்பு திடக்கழிவு மேலாண்மை நிதி, 100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் ஏற்படுத்தப்படும்.**

**121.** நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், முறையான கழிவுநீர் மேலாண்மைமுறை பின்பற்றும் பணிகளுக்கு, இந்த அரசு சிறப்பு முன்னுரிமை அளித்து வருகிறது. சென்னை மாநகராட்சியோடு இணைக்கப்பட்டுள்ள **42** நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், வளசரவாக்கம், ஆலந்தூர் ஆகிய இரு பகுதிகளில் மட்டுமே கழிவுநீர் அகற்றும் திட்ட அமைப்புகள் உள்ளன. மேலும், **13** நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளாக முன்பு இருந்த பகுதிகளில், இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. பிற பகுதிகளில் கழிவுநீர் மேலாண்மை பணிகள் வரும் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும். இதுபோன்றே, **22** நகராட்சிகளில் **870.63** கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தின் மூலமாக கழிவுநீர் அகற்றுவதற்கான திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. கழிவுநீரை முழுமையாகச் சுத்திகரித்து, மறுசுழற்சி செய்து, தொழிற்சாலைகளின் பயன்பாட்டிற்கு பயன்படுத்துவதற்கு, குறிப்பாக, சென்னை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில், சிறப்பு முன்னுரிமை அளிக்கப்படும். பல்வேறு நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், பாதாளச் சாக்கடைத் திட்டங்களை செயல்படுத்துவதற்கான பெருந்திட்டம் ஒன்றையும் இந்த அரசு வகுத்துள்ளது. மாநிலத்தில் சிறப்பு பல்நோக்குத் திட்டங்கள், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புரப் புனரமைப்புத் திட்டத்தின் இரண்டாவது கட்டம், ஆகியவற்றின் நிதியைப் பயன்படுத்தி இத்திட்டங்கள் படிப்படியாக செயல்படுத்தப்படும்.

**122.** **2011–2012** ஆம் ஆண்டிலிருந்து நகர்ப்புரப் பகுதிகளில் திறந்த வெளியில் மலம் கழிப்பதை அறவே அகற்றிடுவதற்கான ஒரு சிறப்புத் திட்டத்தை இந்த அரசு தொடங்கியது. **2011–2012** ஆம் ஆண்டில் இத்திட்டத்தில், **19.83** கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு, அதன் மூலம் **2,484** கழிவறைகளை மேம்படுத்தவும், **1,769** புதிய கழிவறைகளை

கட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2012–2013 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 72.60 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. **2013–2014 ஆம் ஆண்டிலும் 72.60 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

*<u>பேரூராட்சி சாலைகளை மேம்படுத்துதல்</u>*

123. நடப்பு நிதியாண்டில், 292 பேரூராட்சிகளில் உள்ள 470 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை மேம்படுத்துவதற்கான பணிகளை, 101 கோடி ரூபாய் செலவில் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. **2013–2014 ஆம் ஆண்டில் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன், 103 கோடி ரூபாய் செலவில் 281 பேரூராட்சிகளில் உள்ள 425.92 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்படும்.**

## குடிநீர்

124. நெம்மேலியில், நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் கடல் நீரைக் குடிநீராகச் சுத்திகரிக்கக்கூடிய நிலையத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் தொடங்கி வைத்துள்ளார்கள். சென்னையின் தற்போதைய நீர் சேமிப்பு அளவை உயர்த்திடுவதற்காக, கண்ணன் கோட்டை, தேர்வாய்க் கண்டிகை கிராமங்களின் அருகில் 330 கோடி ரூபாய் செலவில் ஒரு புதிய நீர்த்தேக்கம் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், சோழவரம், போரூர், நேமம், அயனம்பாக்கம் ஏரிகளின் கொள்திறனை உயர்த்துவதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளுக்காக 2013–2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 50 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

125. ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் ஃப்ளூரோசிஸ் குறைப்புத் திட்டத்தை இந்த அரசு விரைந்து செயல்படுத்தி வருவதால் இதற்கான பணிகள் விரைவில் முடிக்கப்படும். இத்திட்டத்திற்காக, 2013–2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 500 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மதுரை, விருதுநகர், சிவகங்கை, நாகப்பட்டினம், வேலூர், சேலம், திருப்பூர், கோயம்புத்தூர் மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் முக்கியக் கூட்டுக்குடிநீர்த் திட்டங்களுக்காக, 2013–2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 212.54 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

126. 2012–2013 ஆம் ஆண்டில் 7,000 ஊரகக் குடியிருப்புப் பகுதிகளில் 781.10 கோடி ரூபாய் செலவில் குடிநீர் வழங்கல் பணிகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. **2013–2014 ஆம் ஆண்டில் ஓரளவு குடிநீர் வசதி பெற்றுள்ள 6,000 ஊரகக் குடியிருப்புகளுக்கும், குடிநீரின் தரம் பாதிக்கப்பட்டுள்ள 195 குடியிருப்புகளுக்கும், தேசிய ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டம், அடிப்படைத் தேவைகள் திட்டம் மற்றும் மாநில அரசு நிதியின் கீழ், 1,190.72 கோடி ரூபாய் செலவில் குடிநீர் வசதிகளை அளித்திட இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.**

## நகர்ப்புர வீட்டுவசதி

127. இந்த நிதியாண்டில் 1,530.45 கோடி ரூபாய் செலவில் 5,954 வீடுகளை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அமைத்து வருகிறது. தற்போது நடைபெற்று வரும் 18,055 குடியிருப்புகளுக்கான பணிகளை 2013–2014 ஆம் ஆண்டில், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் நிறைவேற்றி முடிக்கும். மேலும், 12,845 புதிய குடியிருப்புகளை 1,936.91 கோடி ரூபாய் செலவில் அமைப்பதற்கான பணிகளையும் 2013–2014 ஆம் ஆண்டில் இவ்வாரியம் தொடங்கும். **வரும் மூன்றாண்டுகளில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமும்,**

**தமிழ்நாடு குடிசை மாற்று வாரியமும் இணைந்து, பல்வேறு திட்ட நிதிகளைப் பயன்படுத்தி, குறைந்த வருவாய்ப் பிரிவினர் மற்றும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினரின் வீட்டு வசதித் தேவைகளை நிறைவு செய்ய, 50,000 வீடுகளை அமைப்பதற்கான பணிகளை மேற்கொள்ளும். தற்போதுள்ள குடிசைப் பகுதிகளை மறுமேம்பாடு செய்வதும் இத்திட்டத்தில் ஓர் அங்கமாக இருக்கும்.**

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

128. 2013–2014 ஆம் ஆண்டிற்கான, ஆதிதிராவிடர் துணைத் திட்டத்திற்கு 7,042 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து, ஆதிதிராவிடர் நலனில், இந்த அரசு தனது அக்கறையை வெளிப்படுத்தியுள்ளது. இது, 2012–2013 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டைவிட 15.29 சதவீதம் கூடுதலாகும். **தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்திற்குப் புத்துயிரூட்ட, 2013–2014 ஆம் ஆண்டிற்கு பங்கு மூலதன உதவியாக 13.26 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் சிறப்பு உதவி மூலம், பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்திட இந்த நிறுவனத்திற்கு மேலும் 122.48 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவுகளைச் சேர்ந்த மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்குவதற்காக, 56.34 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

129. தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்களுக்கும் உயர் கல்வி உதவித் தொகை வழங்க இந்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை, மாணவர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டில், உயர் கல்வி உதவித் தொகை வழங்குவதற்காக 420.34 கோடி

ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுமட்டுமின்றி, இதே பிரிவைச் சேர்ந்த மாணவர்களின் பள்ளிக் கல்வி உதவித் தொகைக்காக 59.53 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தமாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்களின் கல்வி உதவித் தொகைக்கான ஒதுக்கீடு, சென்ற ஆண்டைவிட 10.62 சதவீதம் கூடுதலாக, அதாவது, 479.87 கோடி ரூபாய் என உயர்த்தப்பட்டுள்ளது.

130. மாநிலத்தில் உள்ள 1,641 மாணவர் விடுதிகளில் 1.31 இலட்சம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்களுக்கு உணவு மற்றும் உறைவிட வசதியை அரசு அளித்து வருகிறது. 2012–2013 ஆம் ஆண்டில் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் 35.04 கோடி ரூபாய் செலவில் 44 விடுதிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த அரசு மாநிலத்தில் உள்ள அனைத்து மாணவ மாணவியர் விடுதிகளும் அரசின் சொந்தக் கட்டடங்களில் மட்டுமே செயல்படுவதை உறுதி செய்யும்.

131. 2012–2013 ஆம் ஆண்டில் 349.30 கோடி ரூபாயாக இருந்த பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான ஒதுக்கீடு, 2013–2014 ஆம் ஆண்டில் 489.48 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. ஆண்டு திட்ட ஒதுக்கீட்டில் இது 1.32 சதவீதமாகும். அவசியமான கட்டமைப்பு வசதிகளான குடிநீர் வழங்கல், கிராமங்களுக்கு சாலை இணைப்புகள் ஏற்படுத்துதல், வீடுகள் கட்டுதல் போன்றவை இந்த பழங்குடியினர் துணைத் திட்டத்தின் முக்கியக் கூறுகள் ஆகும். குறிப்பாக, அருகிவரும் பழங்குடியின மக்களின் மேம்பாட்டிற்காக 25.72 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*<u>பழங்குடியினர் வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டம்</u>*

132. மாநிலத்தில் உள்ள பழங்குடியின மக்களின் முழுமையான வளர்ச்சியை உறுதிசெய்ய, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு சிறப்புத் திட்டத்தை தொடங்கியுள்ளார்கள். இத்திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் ஜமுனாமரத்தூர், கொல்லிமலை, ஆனைகட்டி, பச்சைமலை, கல்வராயன் மலை ஆகிய இடங்களில் ஐந்து புதிய பல்தொழில்நுட்பப் பயிற்சி நிலையங்கள் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இது தவிர, பல்வேறு பிற பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்காக, 2013–2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மீண்டும் 50 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.**

## பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன்

133. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு 50 சதவீத இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்தி, மாநிலத்தில் சமூகநீதியை இந்த அரசு நிலைநாட்டியுள்ளது. இவர்களின் மேம்பாட்டுக்கான நிதி ஒதுக்கீடு ஆண்டுதோறும் தொடர்ந்து உயர்த்தப்பட்டு வருகிறது. 2013–2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இதற்காக, 764.43 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

134. 2012–2013 ஆம் ஆண்டில், 28 புதிய மாணவர் விடுதிகள் திறக்கப்பட்டன. மேலும் இந்த ஆண்டில் 64.48 கோடி ரூபாய் செலவில் 84 விடுதிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தவிர, 56 விடுதிகளுக்கு நபார்டு வங்கியின் நிதியுதவியுடன், 50.01 கோடி ரூபாய் செலவில் கட்டடங்கள்

கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த அரசு தேவையான இடங்களில் புதிய விடுதிகளை தொடங்குவதற்கும், அனைத்து விடுதிகளும் சொந்த கட்டடத்தில் இயங்க புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும், தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும்.

**135.** இந்த அரசு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் கல்வி மேம்பாட்டிற்காக, மாணவ மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்கி வருகிறது. 2013–2014 ஆம் ஆண்டில் தேர்வுக் கட்டணம், கல்விக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணங்கள் உள்ளிட்ட கல்வி உதவித் தொகைகளுக்காக 173.98 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது, 5,06,630 ஏழை மாணவர்கள் கல்வியைத் தொடர உதவும். மேற்கண்ட பிரிவுகளைச் சேர்ந்த மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்குவதற்காக, 139.42 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**136.** சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்திடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்து வருகின்றது. இப்பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான பல்வேறு கல்வி உதவித் தொகைத் திட்டங்களுக்காக, 2013–2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 55.21 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. வக்பு நிறுவன மேம்பாட்டு நிதி ஏற்படுத்தப்பட்டு, மானியமாக மூன்று கோடி ரூபாய் அளிக்கப்பட்டுள்ளது. ஜெருசலேத்திற்கு புனிதப்பயணம் மேற்கொள்ளும் கிறித்தவர்களுக்கு நிதியுதவி அளிப்பதற்காக, 2013–2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒரு கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டில், சிறுபான்மையினர் நலனுக்காக 60.39 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன்

**137.** இந்த அரசு, முழு அதிகாரம் பெற்றவர்களாக பெண்கள் திகழ்வதை உறுதி செய்யும். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம், பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்கள், விதவைகள் மற்றும் கைவிடப்பட்ட பெண்களுக்கான உதவித் தொகைத் திட்டம், பெண்குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தைகளுக்கான சிறப்பு ஊக்க உதவித் தொகை போன்ற திட்டங்களில் வழங்கப்படும் நிதியுதவியை கணிசமான அளவில் உயர்த்தி, இந்த அரசு புரட்சிகரமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. விலையில்லாக் கறவைப் பசுக்கள், செம்மறி ஆடுகள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தில், பயன் பெறும் அனைத்து பயனாளிகளும் பெண்களே என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். திருமாங்கல்யத்திற்காக, நான்கு கிராம் தங்கக் காசோடு, உயர்த்தப்பட்ட திருமண உதவித் தொகை வழங்கும் திட்டத்திற்காக 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 750 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டில் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்திற்காக 105 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. பெண் குழந்தைகளுக்கான சிறப்பு நிதியுதவிக்காக 34.26 கோடி ரூபாய் அளிக்கப்பட்டுள்ளது.

**138.** தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், 85.69 இலட்சம் பெண்களை உறுப்பினர்களாக கொண்ட, 5.56 இலட்சம் சுய உதவிக் குழுக்களை அமைத்துள்ளது. இதுவரை, 4.93 இலட்சம் குழுக்களுக்கு 18,200.94 கோடி ரூபாய் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்களுக்கு அனைவரும் பயன்பெறத்தக்க கடன் உதவித் திட்டத்தின் கீழ் (Scheme of financial Inclusion), வரும் நிதியாண்டில்

6,000 கோடி ரூபாய் அளவிற்குக் கடன் உதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

*<u>மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி விநியோகம்</u>*

**139.** விலையில்லா மிக்சிகள், கிரைண்டர்கள் மற்றும் மின்விசிறிகள் வழங்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னோடித் திட்டம், வீட்டு வேலைப் பளுவிலிருந்து பெண்களை விடுவித்துள்ளது. மலைப்பாங்கான பகுதிகளில் மின்விசிறிகளுக்குப் பதிலாக மின் அடுப்புகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. 2011–2012 ஆம் ஆண்டில், இந்த அரசு 1,361.62 கோடி ரூபாய் செலவில் 25 இலட்சம் உபகரணத் தொகுப்புகளை வழங்கியது. 2012–2013 ஆம் ஆண்டில் 1,556 கோடி ரூபாய் செலவில் 35 இலட்சம் உபகரணத் தொகுப்புகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. **2013–2014 ஆம் ஆண்டில், மேலும் 35 இலட்சம் உபகரணத் தொகுப்புகளை இந்த அரசு விநியோகிக்கும். இதற்காக 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 1,500 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.**

*<u>புரட்சித் தலைவர் எம்ஜிஆர் மதிய உணவுத் திட்டம்</u>*

**140.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளவாறு பலவகையான உணவு வகைகள், சத்துணவுத் திட்டத்திலும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்திலும் மாவட்டந்தோறும் ஒரு வட்டாரத்தில் சோதனை முறையில் வழங்கப்படும். 2013–2014 ஆம் ஆண்டில் 53.53 இலட்சம் குழந்தைகளுக்குப் பயனளிக்கும் வகையில் சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்திட, இந்த அரசு 1,492.86 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. **மேலும், 2013–2014 ஆம் ஆண்டில், 359.70 கோடி ரூபாய் செலவில் 14,130 மதிய உணவு மையங்களில்**

**சமையலறை, இருப்பு அறைக்கான கட்டடம் கட்டும் பணிகளை இந்த அரசு தொடங்கி செயல்படுத்தும்.**

*<u>ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்</u>*

**141.** சென்னை, வேலூர், திருச்சி, திண்டுக்கல் மற்றும் தேனி ஆகிய ஐந்து மாவட்டங்களில் சோதனை முறையில் அங்கன்வாடியில் பயிலும் குழந்தைகளுக்கு வண்ண உடைகள் வழங்குவதற்கான திட்டம் 2012–2013 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. **2013–2014 ஆம் ஆண்டில் விழுப்புரம், அரியலூர், பெரம்பலூர், நாகப்பட்டினம் மற்றும் திருநெல்வேலி ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.** இந்த வரவு–செலவுத் திட்டத்தில் அங்கன்வாடி குழந்தைகளுக்கு வண்ணச் சீருடைகள் வழங்குவதற்காக 4.30 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்திற்காக 1,320.52 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## முதியோர், ஆதரவற்றோர் மற்றும் ஒடுக்கப்பட்டோர் நலன்

**142.** சமூகப் பாதுகாப்பு உதவித் தொகைத் திட்டங்களில் வழங்கப்படும் மாதாந்திர நிதியுதவியை, ஆயிரம் ரூபாயாக இந்த அரசு உயர்த்தியுள்ளது. முதியோர் ஓய்வூதியம், ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியம் போன்ற திட்டங்களில் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 2010–2011 ஆம் ஆண்டில் 23.71 இலட்சமாக இருந்தது. இது 2012–2013 ஆம் ஆண்டில் 30.72 இலட்சமாக உயர்ந்துள்ளது. இத்திட்டங்களுக்கான மொத்த ஒதுக்கீடு 2010–2011 ஆம் ஆண்டில் 1,207.32 கோடி ரூபாயாக இருந்தது. 2013–2014 ஆம் ஆண்டிற்கு இது 3,461.75 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

**143.** இந்த அரசு உறுதியளித்தவாறே சமூகப் பாதுகாப்பு உதவித் தொகைகளையும் மற்ற பணப் பயன்களையும் வங்கிக் கணக்கு மூலமாக நேரடியாக விநியோகிக்கும் முறை ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை, **6.24** இலட்சம் பயனாளிகளுக்கு வங்கிக் கணக்கு மூலமாக ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களிலும், நகரங்களிலும் உள்ள எஞ்சிய அனைத்து பயனாளிகளுக்கும் இதனை விரிவுபடுத்துவதற்கான பணிகளும் வேகமாக நடைபெற்று வருகின்றன.

## மாற்றுத் திறனாளிகள் நலன்

**144.** அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் பல்வேறு கொள்கைகளை வகுத்து திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலமாக தமிழக அரசு, மாற்றுத் திறனாளிகளுக்கு தனது முழு ஆதரவை அளித்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டவாறு அரசுப் பணிகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சதவீத இடஒதுக்கீட்டை உறுதி செய்வதற்காக, தலைமைச் செயலாளரின் தலைமையிலான ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. கடும் ஊனமுற்றோர், மனநிலை பாதிக்கப்பட்டோர் மற்றும் தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டோருக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்குவதற்காக, **2013–2014** ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் **131.05** கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக **2013–2014** ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் **263** கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## தொழிலாளர் நலன்

**145.** இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், 17 அமைப்புசாராத் தொழிலாளர் நலவாரியங்கள் மூலமாக 7.16 இலட்சம் தொழிலாளர்களுக்கு 178.86 கோடி ரூபாய் நலத் திட்ட உதவியாக வழங்கப்பட்டுள்ளது. **நலவாரியங்களின் உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வங்கிக் கணக்குகள் மூலமாக நேரடியாக மின்னணுப் பரிமாற்றம் மூலம் வழங்குவதற்கான முயற்சி, சோதனை முறையில் ஆறு மாவட்டங்களில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த முறை அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.**

## இலங்கைத் தமிழ் அகதிகள் நலன்

**146.** அனைத்து நலத்திட்ட உதவிகளையும் மாநிலத்தில் உள்ள பல்வேறு அகதிகள் முகாம்களில் வசிக்கக்கூடிய இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்தி, அவர்களுக்கு வழங்கப்படும் நிதி உதவியையும் இந்த அரசு உயர்த்தியுள்ளது. மேலும், **வரும் நிதியாண்டிலிருந்து, அகதிகள் முகாம்களுக்கு வெளியில் வசிக்கக்கூடிய அகதிகளுக்கும் முதலமைச்சரின் புதிய விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் பயன்கள் அளிக்கப்படும்.** மொத்தமாக, இலங்கைத் தமிழ் அகதிகளின் நலனுக்காக 2013–2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 109.91 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## ஓய்வூதியர் நலன்

**147.** 1.1.2013 அன்றைய நிலவரப்படி நமது மாநிலத்தில் 7,00,350 ஓய்வூதியதாரர்கள் உள்ளனர். இவர்களுக்குச் சரியான நேரத்தில் ஓய்வூதியப் பலன்களை அளிப்பதற்காக, 16,514.34 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **அரசு அலுவலர்களுக்கு உள்ளது போலவே**

**ஓய்வூதியதாரர்களின் மருத்துவச் செலவினங்களை ஈடு செய்ய தனி காப்பீட்டுத் திட்டத்தை வரும் நிதியாண்டில் இந்த அரசு தொடங்கும். மேலும், ஓய்வூதியதாரர்களை இழந்து தவிக்கும் குடும்பங்களுக்கு தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்கள் குடும்ப பாதுகாப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் உதவி 35,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தப்படும்.**

## அரசு ஊழியர் நலன்

148. 2012–2013 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் வீடு கட்டுவதற்கான முன்பணம் 15 இலட்சம் ரூபாயிலிருந்து 25 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. இதற்காக, 2013–2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 252.95 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அரசு அலுவலர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், இதுவரை 21,656 அலுவலர்கள் 215.34 கோடி ரூபாய் அளவிற்கு காப்பீட்டு உதவி பெற்று பலனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்காக, 2013–2014 ஆம் ஆண்டில் 37.46 கோடி ரூபாய் அரசின் பங்கினையும் சேர்த்து, காப்பீட்டுத் தொகையாக 270 கோடி ரூபாய் செலுத்தப்படும்.

## வழக்கறிஞர் நலன்

149. மரணமடைந்த வழக்கறிஞர்களின் சட்டபூர்வ வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியை இரண்டு இலட்சம் ரூபாயிலிருந்து 5.25 இலட்சம் ரூபாயாக இந்த அரசு உயர்த்தியுள்ளது. மேலும், தமிழ்நாடு வழக்கறிஞர்கள் நலநிதிக்கு ஆண்டுதோறும் நான்கு கோடி ரூபாய் மானியமாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கானத்

தொகை **2013–2014** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பகுதி – ஆ

## வரவு– செலவுத் திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள்

**150.** **2012–2013** ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு மற்றும் **2013–2014** ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டுச் செலவினங்களுக்கான நிதி ஆதாரங்கள் பற்றி இனி நான் குறிப்பிட விரும்புகிறேன்.

*மத்திய வரிகளில் பங்கு*

**151.** மத்திய அரசு தன்னுடைய வரி வருவாய் இலக்கினை எய்த மீண்டும் தவறியுள்ளது. இதன் விளைவாக, மாநில அரசுக்கு கிடைக்க வேண்டிய மத்திய வரி வருவாயின் பங்கு **500** கோடி ரூபாய்க்கு மேல் குறைந்துள்ளது. நம்முடைய மொத்த வருவாயில், மத்திய வரிப் பகிர்வில் மாநில அரசின் பங்கு குறைந்து கொண்டே வருகிறது. **2007–2008** இல் **17** சதவீதமாக இருந்த இந்த விகிதம், **2012–2013** இல் **14.7** சதவீதமாக குறைந்துள்ளது. இந்தப் போக்கினால், மாநிலத்தின் சொந்த நிதி ஆதாரங்களை நாம் மேலும் சார்ந்திருக்கும் நிலை அதிகரித்துள்ளது.

*மத்திய அரசிடமிருந்து பெறும் மானியங்கள்*

**152.** இத்தகைய இடர்பாடான தருணங்களில் கூட மாநிலத்திற்கு உதவிட மனமில்லாத வகையில் மத்திய அரசின் போக்கு உள்ளது. இந்த சூழலில், பேரறிஞர் அண்ணா அவர்கள், **1962** ஆம் ஆண்டில், பாராளுமன்ற மாநிலங்களவையில் தீர்க்கதரிசனமாக ஆற்றிய உரையே எனக்கு நினைவுக்கு வருகிறது.

"தொழில் வளர்ச்சியில் தென்னிந்தியா புறக்கணிக்கப்படுகிறது. புதிய உருக்கு ஆலை இல்லை. புதிய இருப்புப்பாதை இல்லை. பெட்ரோலியம் சுத்திகரிப்பு நிலையம்கூட இல்லை. குறிப்பிடத்தக்க தொழில் திட்டங்கள் எதுவும் தென்னிந்தியாவிற்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இரும்பு உருக்கு ஆலையினை உருவாக்காமல், கனரக அமைச்சரவை பொறுப்பு மட்டுமே ஒரு தென்னிந்தியருக்கு வழங்கப்பட்டுள்ளது. ‘‘இதுவா அரசியல் திறன் ?’’

என பேரறிஞர் அண்ணா அவர்கள் முழங்கியுள்ளார்.

**153.** பல ஆண்டுகள் கடந்து விட்டாலும் அறிஞர் அண்ணா அவர்களின் இந்த வார்த்தைகள் இத்தருணத்திலும்கூட இன்றைய சூழலை எதிரொலிப்பதாக உள்ளன. தமிழ்நாட்டில் இருந்து மத்திய அரசில் பல அமைச்சர்கள் பங்கு பெற்றுள்ளனர். ஆனால் அவர்களால் நமக்கு விளைந்த பயன் என்ன ?

**154.** மத்திய அரசின் 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்துடன் அறிமுகம் செய்யப்பட்டுள்ள 2013 ஆம் ஆண்டு நிதிநிலைச் சட்ட வரைவில் மிகவும் பிற்போக்கான, கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான பிரிவுகள் கொண்டுவரப்பட்டுள்ளன. மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்களின் வருவாயிலிருந்து, மாநில அரசு பெறக்கூடிய சட்டப்பூர்வமான கட்டணங்களை மத்திய அரசின் வருமான வரி விதிவிலக்கில் கழித்துக்கொள்ள இயலாது என மத்திய அரசின் 2013 ஆம் ஆண்டு நிதிநிலைச் சட்டவரைவு பிரிவு 7–ன் கீழ் கூறப்பட்டுள்ளது. இதனால், மாநிலத்திற்கு நியாயப்பூர்வமாகக் கிடைக்கும் வரி மற்றும் வரியல்லாத வருவாயைக் குறைத்து, மத்திய அரசு தனது வருமானத்தினை பெருக்கக் கருதியுள்ளது. **இச்செயல் மாநில அரசுகளின் வருவாயின்மேல் விதிக்கப்படும் மறைமுக வரிவிதிப்பாக**

**அமைந்துள்ளதால், இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 289–ல் மாநில அரசுகளின் வருவாய் மீது அனுமதிக்கப்பட்டுள்ள மத்திய அரசின் வரி விலக்குக்கு எதிராக அமைந்துள்ளது.** கூட்டாட்சித் தத்துவத்திற்கு முரணாகவும், தவறான திட்டமிடுதலாலும் தேவையற்ற வழிமுறையைப் புகுத்தும் இப்பிரிவினை உடனடியாக விலக்கிக் கொள்ளுமாறு மத்திய அரசை வலியுறுத்துகிறோம்.

155. 2013–2014 ஆம் ஆண்டு மத்திய நிதிநிலை அறிக்கையில், திட்டச் செலவினத்தில் 20 சதவீதத்தை குறைத்துவிட்ட காரணத்தால், மாநில அரசின் நிதியைத் திட்டமிடுவதில் மிகப்பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நமக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய தொகை மறுக்கப்பட்டும், தாமதப்படுத்தப்பட்டும் வருகிறது. சுருக்கமாகக் கூறினால், போதிய திறமையின்மை காரணமாக, மாநிலத்திற்கான திட்ட ஒதுக்கீட்டைக் குறைத்து, நிதிப்பற்றாக்குறையினைச் செயற்கையாகக் குறைத்து காட்டும் மத்திய அரசின் நடவடிக்கையால், மாநில அரசுகளுக்குத்தான் அதிக சுமை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட வெள்ளத் தடுப்புத் திட்டங்களுக்கு, தமிழக அரசால் செலவழிக்கப்பட்ட 395 கோடி ரூபாயினை, கடந்த இரண்டு ஆண்டுகளாக மத்திய அரசு விடுவிக்கவில்லை. இதே போன்று, அனைவருக்கும் கல்வித் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு இயக்கம் போன்ற திட்டங்களிலும், கணிசமான தொகை மத்திய அரசிடமிருந்து வரவேண்டியுள்ளது.

156. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! மானியக் குறைப்பினால் உடனடியாக மாநிலத்திற்கு நிதிச்சுமை மேலும் கூடியுள்ள போதிலும், இந்த அரசு அனைத்து நலத் திட்டங்களுக்கும் எவ்வித தங்கு தடையுமின்றி, நிதியளித்து நடைமுறைப்படுத்தும் என்பதை இந்த அவைக்கு உறுதியாகக் கூறுகிறேன்.

*<u>மாநில அரசின் சொந்த வரி வருவாய்.</u>*

**157.** பொருளாதார நிலையில் ஏற்பட்டுள்ள மந்தநிலை, மாநிலத்தின் வரி வளர்ச்சியில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. மூலதனத்தை ஈர்க்கும் வாய்ப்புகளில், குறிப்பாக, உற்பத்தி துறையில் ஒரு பெருத்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனினும், இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு, பொருளாதார நிலை சீரமைக்கப்பட்டு வருவதால், மதிநுட்பமிக்க கொள்கை முடிவுகளின் மூலம் **2012–2013** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட வரி வசூல் இலக்கு எய்தப்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

**158.** மொத்த உற்பத்தி மதிப்பில் வரி வருவாயின் விகிதாச்சாரத்தில் (Tax to GSDP ratio) நாட்டிலேயே சிறந்து விளங்கும் மாநிலங்களில் ஒன்றாக நமது மாநிலம் திகழ்கிறது. **2011–2012** ஆம் ஆண்டில் இந்த விகிதம் **9.3** ஆக இருந்தது. **2012–2013** ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டின்படி இந்த விகிதம் **10.3** ஆக உயர்ந்துள்ளது. ஒளிவு மறைவற்ற வரி நிருவாகம் மற்றும் திறமையான வரி வசூல் முறை ஆகியவற்றின் காரணமாக மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் வரி வருவாயின் சதவிகிதம் உயர்ந்து வருகிறது. **2013–2014** ஆம் ஆண்டிலும் இது சாதகமாக இருக்கும் என நம்புகிறேன்.

**159.** அதிகரித்து வரும் பணவீக்கம், குறைந்த பொருளாதார வளர்ச்சி போன்ற சூழ்நிலைகளில், மேம்போக்கான நடவடிக்கைகள் மாற்றத்தை ஏற்படுத்தாது. நிதிச் சிக்கனம், முதலீடு செய்வதற்கான ஊக்கம், ஒளிவு மறைவற்ற நிருவாக அணுகுமுறை, ஆகியவையே மாநில அரசு பின்பற்ற வேண்டிய வழிமுறைகளாகும். பொருளாதாரத்திற்கு பாதகத்தை ஏற்படுத்துகின்ற சிறிய அறிகுறி தென்பட்டாலும், ஒரு தொலைநோக்குச் சிந்தனையுடைய தலைவர் அந்த அபாயத்தினை

மதிப்பீடு செய்து பிரச்சனையினை தவிர்ப்பதற்குரிய வழியையே காணுவார். எனவே, முக்கியச் செலவினங்களுக்கும், நிதி ஆதாரங்களுக்கும் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளபோதிலும், இந்தியப் பொருளாதாரத்தில் நிலவிவரும் பொதுவான மந்தநிலை, மாநில பொருளாதாரத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினை கருத்தில் கொண்டு, **இந்த வரவு செலவுத் திட்டத்தில் புதிய வரிவிதிப்போ, நடைமுறையிலுள்ள வரி விகிதத்தினை உயர்த்துவதோ தேவையில்லையென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்துள்ளார்கள்.**

**160.** **2012–2013** ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டை காட்டிலும், **2013–2014** ஆம் ஆண்டில், மாநிலத்தின் சொந்த வரிவருவாய் **17** சதவிகிதம் உயருமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் இலக்கு **86,065.40** கோடி ரூபாய் என அரசு நிர்ணயித்துள்ளது. வணிக வரி **56,025.24** கோடி ரூபாயாகவும், ஆயத் தீர்வை **14,469.87** கோடி ரூபாயாகவும், மோட்டார் வாகன வரிகள் **4,881.15** கோடி ரூபாயாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. **2013–2014** ஆம் ஆண்டில், பத்திரப் பதிவுகள் அதிகரிக்க வாய்ப்புள்ளதால், முத்திரைத்தாள் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் மூலம் **9,874.22** கோடி ரூபாய் வசூலாகும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

*பொதுக்கடன்*

**161.** **2012–2013** ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிகர பொதுக் கடன் **20,716** கோடி ரூபாயாகும். இருப்பினும், அரசின் கடன் சுமையினை கட்டுப்படுத்த அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், நிதி நெருக்கடிகளுக்கு இடையிலும் **15,675** கோடி ரூபாய் மட்டுமே **2012–2013** ஆம் ஆண்டில் நிகரக் கடனாகப் பெறப்பட்டுள்ளது. இந்த நிகரக் கடன், மூலதனச்

செலவினத்தைக் காட்டிலும் குறைவாக இருப்பதால், இந்த கடன் முழுவதும் மூலதனச் செலவுகளுக்கு மட்டுமே செலவிடப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன். மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில், கடனின் அளவு **24.5** சதவீதம் வரை இருக்கலாம் என்ற வரையறை இருந்தாலும், கடன் அளவு **18.98** சதவீதம் என்ற அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. **2013–2014** ஆம் ஆண்டில் ஒப்புதல் வழங்கப்பட்ட நிகரக் கடன் அளவு **24,263** கோடி ரூபாயாக இருப்பினும், மூலதன செலவிற்காக **21,142** கோடி ரூபாய் மட்டுமே நிகரக் கடனாகப் பெற இந்த அரசு உத்தேசித்துள்ளது.

## நிதிநிலை குறியீடுகள்

**162.** கடந்த இரண்டு ஆண்டுகளில், இந்த அரசு நிதி நிலைமையினை திறம்பட சீரமைத்துள்ளது. **2010–2011** ஆம் ஆண்டில் **2,728.69** கோடி ரூபாய் வருவாய் பற்றாக்குறை இருந்த நிலையில், கடந்த இரண்டு நிதிநிலை அறிக்கைகளை வருவாய் உபரியோடு இந்த அரசு வெற்றிகரமாக தாக்கல் செய்துள்ளது. **2012–2013** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், **2,376** கோடி ரூபாய் வருவாய் உபரி இருக்கும் என கணிக்கப்பட்டது. ஆனால், செலவினங்கள் அதிகரித்ததன் காரணமாகவும், குறிப்பாக, இந்த அரசு தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மானக் கழகத்தின் நிதி நிலைக்கு புத்துயிரூட்ட வழங்கிய நிதியுதவியினாலும், மத்திய அரசிடமிருந்து பெறப்படும் வருவாய் கணிசமாக குறைந்ததன் காரணமாகவும், திருத்த மதிப்பீட்டில் வருவாய் உபரி **451.52** கோடி ரூபாயாக மட்டும் இருக்கும். இருப்பினும், நிதிப் பற்றாக்குறை **19,889.31** கோடி ரூபாய் அளவிலேயே கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், அது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில், **2.88** சதவீத அளவில் மட்டுமே இருக்கும். இந்த இரண்டு வரையறைகளும்

தமிழ்நாடு நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டம் 2003–இல் வரையறுக்கப்பட்டுள்ள குறியீடுகளுக்கு உட்பட்டும், பதின்மூன்றாவது நிதிக் குழுவின் வரையறைக்கு உட்பட்டும் உள்ளன.

**163.** 2013–2014 ஆம் ஆண்டில் வருவாய் உபரி 664.06 கோடி ரூபாயாகவும், நிதிப் பற்றாக்குறை 22,938.57 கோடி ரூபாயாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிதிப் பற்றாக்குறை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 2.84 சதவிகிதம் அளவிலேயே இருக்கும். இது நிர்ணயிக்கப்பட்ட அளவான மூன்று சதவீதத்திற்கு குறைவானதாகும்.

**164.** நிதிநிலை அறிக்கையின் இணைப்பில், இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் அளிக்கப்பட்டுள்ளது. இதனை நிதிநிலை அறிக்கையின் ஒரு பகுதியாக படிக்கப்பட்டதாக எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

**165.** வளர்ச்சியை மையமாக கொண்டு, அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய வரவு–செலவுத் திட்டத்தினை அளிப்பதற்கு இயன்ற அளவு முயன்றுள்ளேன். கடுமையான நிதி நெருக்கடி நிலவிவரும் சூழ்நிலையிலும், இந்த நிதிநிலை அறிக்கையில், பல புதிய முயற்சிகளும், நடப்புத் திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. பொது விவாதம், மானிய கோரிக்கைகளின் மீது விவாதம் நடைபெறும் பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலும் மாண்புமிகு அமைச்சர்களாலும் மேலும் பல அறிவிப்புகளும் திட்டங்களும் வெளியிடப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**166.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! கடினமான இக்காலங்களில் அறிவார்ந்த முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். மாநிலம் வளர்ச்சிப் பாதையிலிருந்து விலகாமல்,

நாட்டிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழ்நாட்டை மாற்றிட வேண்டும் என்ற நமது குறிக்கோளை நோக்கி பீடுநடை போடும் என இந்த அரசு உறுதியாக நம்புகிறது. எனவே, உறுதியான நம்பிக்கையை ஊட்டக்கூடிய திருக்குறளுடன், என்னுடைய உரையினை நிறைவு செய்கிறேன்.

அருமை யுடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும் (குறள் – 611)

செய்வதற்கு கடினமானது என்று சோர்வடையாமல், இடைவிடாத முயற்சியுடன் செய்தால் எந்தச் செயலிலும் வெற்றி பெறுவது உறுதி.

**167.** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தாம் அரசியலுக்கு வருவதற்கு மிகப்பெரிய தூண்டுகோலாக விளங்கிய சுவாமி விவேகானந்தரின் திருவாக்கான

"எழுமின்! விழிமின்!
வெற்றி இலக்கை எய்தும் வரை
நில்லாது செல்மின்".

என்னும் கட்டளையை இதயத்தில் ஏந்தி, "தமிழர்களின் நலம் – தமிழகத்தின் வளம்" என்னும் குறிக்கோளை அடைந்திட பசி நோக்காது, கண் துஞ்சாது, ஓய்வு என்பதை அறியாது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உழைத்து வருகிறார்கள். அரிமா நோக்குடன் அனைத்துத் துறைகளையும் ஆய்வு செய்து, மக்கள் நலன் ஒன்றையே முதன்மை நோக்கமாகக் கொண்டு, புதிய திட்டங்களை மிகுந்த கவனத்துடன் உருவாக்கி, இந்த வரவு–செலவுத் திட்டத்திற்கு வடிவம் கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தேர்ந்த நிர்வாகத் திறன், தெளிவான தொலைநோக்கு, திறன்மிகு அறிவாற்றல், ஆழ்ந்த அனுபவம், அளவிலா புத்திக் கூர்மை ஆகியவை இந்த

வரவு–செலவுத் திட்டத்தை சிறப்புடன் வடிவமைத்திட வழிவகுத்துள்ளன. இப்பணியை வெற்றிகரமாக நிறைவேற்ற எனக்கு வழிகாட்டியமைக்காக எனது மனமார்ந்த நன்றிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**168.** இந்த நிதிநிலை அறிக்கையினைத் தயாரிப்பதில் என்னோடு முழுமையாக ஒத்துழைத்த நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. க.சண்முகம், இ.ஆ.ப. அவர்களுக்கும் அவருடன் அயராது பணியாற்றிய நிதித்துறையின் அனைத்து அலுவலர்களுக்கும் இத்தருணத்தில் என் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

**169.** இத்துடன் 2013–2014 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கு அவையின் ஒப்புதலைப் பெற்று தருமாறு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**நன்றி**

**வணக்கம்**

**ஓ. பன்னீர்செல்வம்**

நிதி அமைச்சர்

சென்னை
2013 ஆம் ஆண்டு
மார்ச் திங்கள் 21 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2044
நந்தன – பங்குனித் திங்கள் 8 ஆம் நாள்

## இணைப்பு

## இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

தமிழ்நாடு நிதி நிலைப் பொறுப்புடைமைச் சட்டம் 2003 ன் 3(1) பிரிவின்படி, மாநில அரசு, வரவு–செலவுத் திட்ட அறிக்கையுடன் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் குறித்த அறிக்கை ஒன்றையும் சட்டப் பேரவையில் வைக்க வேண்டும். இச்சட்டத்தின் 3(2) பிரிவின்படி, நிதி நிலைக் குறியீடுகளான வருவாய் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை ஆகியவை குறித்த இலக்குகளை வரும் சில ஆண்டுகளுக்குக் குறிப்பிட்டு, அதற்கான அனுமானங்களை விளக்கி, இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். இச்சட்டத்தின்படி, வரும் ஆண்டு மற்றும் அதற்கடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு, அதாவது 2013–2016 ஆம் ஆண்டுகளுக்குரிய இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் தயாரிக்கப்பட்டு சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுகிறது.

**நோக்கங்கள்**

வளர்ச்சி திட்டச் செலவினங்களுக்கான தேவைகள் மற்றும் நிதி சிக்கனத்திற்கும் இடையே ஒரு சமநிலையை ஏற்படுவது இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பல நலத் திட்டங்களை இந்த அரசு தொடங்கியுள்ளது. மேலும், மூலதனச் செலவினங்களும் பெருமளவு உயர்த்தப்பட்டுள்ளன. இத்திட்டங்களுக்குப் போதுமான நிதி வழங்கப்பட வேண்டும். அதே வேளையில், பதிமூன்றாவது நிதிக்குழு வகுத்துள்ள இலக்குகளுக்கு இணங்க நிதிநிலை உறுதித்தன்மையை அடையவும் அரசு உறுதியாக உள்ளது. இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டமானது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதிநிலை இலக்குகளை 2013–2016 ஆண்டு காலத்திலும் மற்றும் அதனைத் தொடர்ந்து பராமரிப்பதையும் உறுதி செய்கிறது.

(அ) வருவாய் உபரி தொடரும்.

(ஆ) நிதிப் பற்றாக்குறை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவீதத்திற்குள் இருக்கும்.

(இ) மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கடனின் சதவீதமானது, 13வது நிதிக் குழு நிர்ணயித்துள்ள வரம்பிற்குள் பராமரிக்கப்படும். அதாவது, 2013–2014 ல் 25 சதவீதத்திற்குக் குறைவாகவும், 2014–2015 ல் 25.2 சதவீதத்திற்குக் குறைவாகவும் பராமரிக்கப்படும்.

## எதிர்காலக் கணிப்புகள்

### I. வருவாய்க் கணக்கு வரவுகள்

2013–2014 ஆம் ஆண்டில் மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் ரூ.1,18,579.87 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

#### 1. மாநில அரசின் சொந்த வரிவருவாய்

2012–2013 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டின்படி மாநில அரசின் சொந்த வரி வருவாய் ரூ.73,560.17 கோடியாகும். 2013–2014 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி ரூ.86,065.40 கோடியாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 17 சதவீத வளர்ச்சியாகும். வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2012–2013 ன் படி, 2012–2013 ஆம் ஆண்டிற்கான மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் மாநில அரசின் சொந்த வரி வருவாய் விகிதம் 10.64 ஆக இருக்கும். மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் முக்கிய அம்சங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(அ) வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு **2013–2014** ல் வணிக வரியின் மூலம் பெறப்படும் வரவுகள் ரூ.**56,025.24** கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பை விட **17.62** சதவீதம் வளர்ச்சி கொண்டதாக இருக்கும். இவ்வுயர் வளர்ச்சி விகிதமானது, சிறந்த வரி நிர்வாகத்தின் மூலமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. இதன் முழு பலன் **2013–2014** ஆம் ஆண்டில் ஏற்படும். மேலும், சில கூடுதல் ஆதாரங்களைத் திரட்டுவதற்கான நடவடிக்கைகளும் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளன.

(ஆ) **2013–2014** ஆம் ஆண்டில் ஆயத்தீர்வை வரவுகள் ரூ.**14,469.87** கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் அதிக வளர்ச்சி விகிதம் இருந்ததைக் கருத்தில் கொண்டு, திருத்த மதிப்பீடு **2012–2013** ஐ விட **16** சதவீதம் உயர்வாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

(இ) இந்த அரசு நில வழிகாட்டி மதிப்பீட்டு உயர்வை அடுத்த ஆண்டிற்கு ஒத்திவைக்க முடிவு செய்துள்ளது. இருப்பினும், **2013–2014** ஆம் ஆண்டில் முத்திரைத்தாள் தீர்வை மற்றும் பதிவு மூலமாகக் கிடைக்கும் வரவுகள், **15.93** சதவீதம் அளவிற்கு வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, **2012–2013** ஆம் ஆண்டில் இவ்வினத்தின்கீழ் பெறப்பட்ட ரூ.**8,516.87** கோடி வருவாயை விட உயர்ந்து, **2013–2014** ஆம் ஆண்டில் ரூ.**9,874.22** கோடியாக இருக்கும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ஈ) நடப்பு நிதியாண்டிலிருந்து மோட்டார் வாகன வரியினைத் திருத்தி அமைப்பதால், இவ்வினத்தின் வளர்ச்சி அதிகமாக, அதாவது **16** சதவீத அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, **2013–2014** ஆம் ஆண்டில் இவ்வினத்தின் கீழ் பெறப்பட்ட ரூ.**4,191.42** கோடி வருவாயை விட உயர்ந்து, **2013–2014** ஆம் ஆண்டில் ரூ.**4,881.15** கோடியாக இருக்கும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**2. வரி அல்லாத வருவாய்**

வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு **2013–2014** ல் வரி அல்லாத வருவாய் ரூ.**6,765.09** கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த இனத்திற்கு நமது மாநிலத்தில் குறைந்த வாய்ப்புகளே உள்ளதாலும், பெரும்பாலான அரசு சேவைகள் விலை இல்லாமலோ அல்லது குறைந்த விலையிலேயே வழங்கப்படுவதாலும், திருத்த மதிப்பீடு **2012–2013** ஆம் ஆண்டு அளவிலிருந்து குறைவான அளவிலேயே வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது. **2014–2015** மற்றும், **2015–2016** ஆம் ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் **3** சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**3. மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு**

மத்திய அரசு பகிர்ந்தளிக்கக்கூடிய நிகர வரி வருவாயில் தமிழக அரசின் பங்கினை, சேவை வரியைப் பொறுத்த வரையில் **5.374** சதவீதத்திலிருந்து **5.047** சதவீதமாகவும், ஏனைய வரிகளைப் பொறுத்த வரையில் **5.305** சதவீதத்திலிருந்து **4.969** சதவீதமாகவும் குறைத்து பதிமூன்றாவது நிதிக்குழு நிர்ணயித்துள்ளது. மத்திய வரிகளில் பங்கு **2013–2014** ஆம்

ஆண்டிற்கான மைய அரசின் வரவு–செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு ரூ.17.285.66 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. 2014–2015 மற்றும் 2015–2016 ஆம் ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் 15 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**4. மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள்,**

2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள் ரூ.8,463.71 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் பல்வேறு திட்டம் மற்றும் திட்டம்சாராப் பணிகளுக்கான நிதியுதவிகள், மற்றும் 13வது நிதிக்குழு பரிந்துரைத்துள்ள நிதியுதவி ஆகியன கருத்தில் கொள்ளப்பட்டன. 2014–2015, 2015–2016 ஆம் ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் 10 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**II. வருவாய்க் கணக்கில் செலவுகள்**

2013–2014 ஆம் ஆண்டிற்கான வருவாய்க் கணக்கு செலவுகள் ரூ.1,17,915.81 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது திருத்த மதிப்பீடு 2012–2013 ஐக் காட்டிலும் 15 சதவீதம் கூடுதலாகும். அதிக அளவிலான வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கியது, நடைமுறையிலுள்ள திட்டங்களுக்கான உதவித் தொகைகளை உயர்த்தியது மற்றும், காலிப் பணியிடங்களைத் திட்டமிட்டு நிரப்பியது போன்றவையே இந்த உயர்வுக்குக் காரணம். வருவாய்க் கணக்கு செலவுகளின் முக்கிய கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

(1) **2013–2014** ல் சம்பளம் குறித்த ஒதுக்கீடு ரூ.34,569.28 கோடி மற்றும் ஓய்வூதியம் குறித்த செலவினத்திற்கான ஒதுக்கீடு ரூ.15,117.82 கோடியாகும். இவ்வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் குறித்த செலவுகள் மொத்த வருவாய்ச் செலவுகளில் **42** சதவீதமாகும். ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி நிலுவைத் தொகை முழுவதுமாக வழங்கப்பட்டிருப்பினும், காலமுறை அகவிலைப்படி உயர்வு, சம்பள உயர்வு மற்றும் காலிப் பணியிடங்களை நிரப்புவதால் ஏற்படும் கூடுதல் செலவு ஆகியவை மேற்கூறிய செலவினம் அதிகரிக்கக் காரணங்களாகும். **2014–2015** மற்றும், **2015–2016** ஆம் ஆண்டுகளில் இதன் வளர்ச்சி விகிதம் **15** சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(2) **2013–2014** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் மானியம் மற்றும் உதவித்தொகைக்கான ஒதுக்கீடு ரூ.45,176.06 கோடியாகும். இலவச அரிசி வழங்குவதாலும், பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்ட ஓய்வூதியத் தொகைகளின் உயர்வாலும், பல்வேறு திருமண உதவித் திட்டங்கள் மற்றும் மகப்பேறு உதவித் திட்டங்களின் உதவித் தொகை உயர்வாலும், கறவை பசுக்கள், ஆடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் இலவசமாக வழங்குவதாலும், மாநிலத்தின் சொந்த வரி வருவாய் உயர்வுக்கேற்ப உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகமாக நிதி பகிர்ந்தளிக்கப்படுவதாலும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கூடுதல் உதவித் தொகை வழங்குவதாலும் அதிக ஒதுக்கீடு அவசியமாகிறது. **2014–2015** மற்றும் **2015–2016** ஆம் ஆண்டுகளில் இதன்

வளர்ச்சி விகிதம் 15 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்படுகிறது.

(3) 2012–2013 திருத்த மதிப்பீட்டைக் காட்டிலும் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2013–2014 ல் ஊதியம் அல்லாத செயல்முறை மற்றும் பராமரிப்பு செலவுகள் 15 சதவீதம் அதிகரித்துள்ளன. இந்த உயர்வு, இலவச மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு சீருடை வழங்குதல் போன்ற திட்டங்களால் ஏற்பட்டுள்ளது. 2014–2015, 2015–2016 ஆம் ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் 9 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்படுகிறது.

(4) 2013–2014 ஆம் ஆண்டில் வட்டி செலுத்துதல் ரூ.13,584 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டிற்கான வட்டிச் செலவு மொத்த வருவாய் வரவில் 10.99 சதவீதமாகும். இவ்விகிதம் 2014–2015 மற்றும் 2015–2016 ஆம் ஆண்டுகளில் முறையே 10.99 சதவீதம் மற்றும் 11.09 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

## III. மூலதனக் கணக்கில் செலவுகள்

2013–2014 ஆம் ஆண்டில் மூலதனம் குறித்த செலவுகளை பெருமளவு உயர்த்த இம்மாநிலம் கருதியுள்ளது. அதன் விளைவாக, மூலதனம் குறித்த செலவுகளுக்கு திருத்த மதிப்பீடு 2012–2013 ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.19,165.42 கோடியைவிட அதிகத் தொகை அளிக்கப்பட்டு, வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2013–2014 ல் ரூ.22,505.14 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது 17.42 சதவீத உயர்வைக் காட்டுகிறது. இது 2014–2015 ஆம் ஆண்டில் 14 சதவீதம் மற்றும் 2015–2016 ஆம் ஆண்டில் 15

சதவீதமாக வளரும் என கணிக்கப்பட்டுள்ளது. **2013–2014** ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்டத்தில் கடன் மற்றும் முன்பணங்கள் உள்ளடக்கிய மூலதனம் குறித்த செலவினத்திற்கு ரூ.**23,602.63** கோடி மதிப்பிடப்பட்டுள்ளது.

## IV. வருவாய் உபரி மற்றும் நிதிப் பற்றாக்குறை

**2013–2014** ஆம் ஆண்டில் வருவாய் உபரி ரூ.**664.06** கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இம்மாநிலமானது, **2014–2015** மற்றும் **2015–2016** ஆம் ஆண்டுகளிலும் தொடர்ந்து வருவாய் உபரியை பராமரிக்கும். **2013–2014** ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறை ரூ.**22,938.57** கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் **2.84** சதவீதமாக இருக்கும். வரும் ஆண்டுகளில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை விகிதம் **2014–2015** ஆம் ஆண்டில் **2.78** ஆகவும், **2015–2016** ல் **2.71** ஆகவும் இருக்கும்.

## V. பொதுக் கடன்

**2013–2014** ஆம் ஆண்டில் மாநில அரசு வாங்க அனுமதிக்கப்பட்ட கடன் அளவு ரூ.**24,263** கோடியாகும். இருப்பினும், அரசு கடன் வாங்குவதைக் குறைக்க உத்தேசித்துள்ளது. மாநில அரசு தொகுநிதியில் நிகர கடன் வாங்குதல் ரூ.**21,142.47** கோடியாக மட்டுமே மதிப்பிடப்பட்டுள்ளது. **31.03.2014** அன்று வருங்கால வைப்பு நிதி போன்றவை உள்ளிட்ட ஏனைய கடன் ரூ.**1,55,129.62** கோடியாக இருக்கும். இது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் **19.18** சதவீதமாகும்.

## VI. **உத்திரவாதங்கள்**

மாநிலம் தனது எதிர்பாராக் கடன் பொறுப்புகளை முறையாக நிருவகித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 100 சதவீத அளவிற்குக் குறைவாகவோ அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 10 சதவீத அளவிற்குக் குறைவாகவோ, இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்கு அமையப்பெற வேண்டும். 31.3.2012 அன்று உள்ளபடி நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்களின் அளவு முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் 31.51 சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 3.80 சதவீதமாகவும் உள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் (Risk weighted) கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 75 சதவீதத்திற்கு மிகாமலோ அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 7.5 சதவீதத்திலோ இதில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் இருக்க வேண்டும். 31.3.2012 அன்று உள்ளபடி மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட அரசு உத்திரவாதங்களின் (Risk weighted guarantees) அளவு, மொத்த வருவாய் வரவுகளில் 7.41 சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 0.89 சதவீதமாவும் உள்ளது. பயனளிக்கக்கூடிய திட்டங்களுக்கு மட்டும் உத்தரவாதங்கள் அளிக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் அரசு உத்தரவாதங்கள் கட்டுப்படுத்தப்படும்.

**வேறுபாட்டு அளவுகள்**

இந்த இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம், செலவினங்களில் பல்வேறு இனங்களை முழுமையாகக் கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளது. எனவே, இவை மேலும் உயர்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், பொருளாதாரத்தின் வளர்ச்சி குறையும்பட்சத்தில் வருவாய் வரவுகள் வேறுபட வாய்ப்புள்ளது. 2013–2014, 2014–2015 மற்றும் 2015–2016 ஆகிய ஆண்டுகளில் வருவாய் வரவுகளின் வளர்ச்சி 3 சதவீத அளவிற்குக் குறைந்தாலும், உதவித்தொகை மானியங்கள் மற்றும் மூலதனம் குறித்த செலவுகள் போன்ற செலவினங்களைக் குறைப்பதால், வருவாய் உபரி மற்றும் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறையை 3 சதவீதத்திற்குள் பராமரிக்க இயலும்.

**முடிவு**

நமது மாநிலம் கடந்த பத்து மாதங்களில் குறிப்பிடத்தக்க அளவில் நிதிநிலை சீரமைப்பை அடைந்துள்ளது. பதிமூன்றாவது நிதிக்குழு 2013–2014 ஆம் ஆண்டுகளில் நிர்ணயித்துள்ள அனைத்து இலக்குகளையும் மாநிலம் அடையும். மேலும், வரும் ஆண்டுகளிலும் இதே நிலையை பராமரித்து வரும்.

* * * *

## அட்டவணை – இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

(ரூபாய் கோடியில்) (தற்போதைய விலையில்)

| மார்ச்-2013 | 2011-2012 கணிப்புகள் | 2011-2012 கணக்குகள் | 2012-2013 கணிப்புகள் | 2012-2013 திருத்த மதிப்பீடு | 2013-2014 கணிப்புகள் | 2013-2014 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2014-2015 கணிப்புகள் | 2015-2016 கணிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருவாய்** | **72,770.26** | **85,202.14** | **98,793.94** | **101,777.39** | **114,551.28** | **118,579.87** | **137,713.82** | **157,069.22** |
| மாநிலத்தின் சொந்த வருவாய் | 52,942.82 | 65,200.88 | 75,166.93 | 80,248.52 | 88,393.22 | 92,830.50 | 108,525.22 | 123,967.84 |
| வரி | 49,311.60 | 59,517.31 | 70,548.70 | 73,560.17 | 82,179.63 | 86,065.40 | 101,557.18 | 116,790.75 |
| வரி அல்லாதவை | 3,631.22 | 5,683.57 | 4,618.23 | 6,688.35 | 6,213.59 | 6,765.09 | 6,968.05 | 7,177.09 |
| மத்திய அரசிடமிருந்து பெறப்படுபவை | 19,827.44 | 20,001.26 | 23,627.01 | 21,528.87 | 26,158.06 | 25,749.37 | 29,188.59 | 33,101.38 |
| பங்கிடப்பட்ட வரிகள் | 11,961.94 | 12,714.95 | 15,077.74 | 14,519.69 | 17,287.34 | 17,285.66 | 19,878.51 | 22,860.29 |
| உதவி மானியம் | 7,865.50 | 7,286.31 | 8,549.27 | 7,009.18 | 8,870.72 | 8,463.71 | 9,310.08 | 10,241.09 |
| | | | | | | | | |
| **வட்டியல்லாத செலவு** | **78,825.12** | **93,058.06** | **106,572.89** | **110,912.20** | **124,343.41** | **127,933.51** | **147,583.32** | **1,67,881.26** |
| சம்பளங்கள் (கல்விக்கான மானியங்கள் உட்பட) | 24,535.50 | 26,797.36 | 31,154.13 | 29,392.58 | 32,863.91 | 34,569.29 | 40,100.38 | 46,516.44 |
| ஓய்வூதியங்களும் ஓய்வுகாலப் பலன்களும் | 10,883.82 | 12,276.74 | 13,774.72 | 12,964.94 | 14,651.44 | 15,117.83 | 17,785.50 | 20,453.33 |
| ஊதியம் அல்லாத செயல்பாடுகளும் பராமரிப்புகளும் | 4,840.17 | 6,365.24 | 7,871.01 | 8,193.53 | 9,684.42 | 9,424.33 | 10,366.76 | 11,407.44 |
| உதவித் தொகைகளும் நிதி மாற்றங்களும் | 23,824.76 | 28,973.56 | 34,506.46 | 39,976.86 | 41,619.27 | 45,176.06 | 52,404.23 | 58,692.74 |
| ஏனைய வருவாய்ச் செலவினங்கள் | 7.57 | 6.99 | 7.34 | 43.46 | 39.88 | 43.37 | 45.54 | 48.27 |
| மூலதன ஒதுக்கீடு | 14,127.39 | 16,335.65 | 18,259.23 | 19,165.42 | 23,984.49 | 22,505.14 | 25,880.91 | 29,763.05 |
| நிகரக் கடன் வழங்கல் | 605.91 | 2302.52 | 1000.00 | 1175.41 | 1500.00 | 1097.49 | 1000.00 | 1,000.00 |
| | | | | | | | | |
| **நிதிக் குறியீடுகள்** | | | | | | | | |
| முதன்மை உபரி(+) / பற்றாக்குறை (–) | **-6,054.86** | **-7,855.92** | **-7,778.95** | **-9,134.81** | **-9,792.13** | **-9,353.64** | **-9,869.51** | **-10,812.04** |
| வட்டி செலுத்துதல் | 8,411.42 | 9,418.15 | 10,130.17 | 10,754.49 | 12,587.11 | 13,584.93 | 15,420.02 | 16,962.02 |
| மொத்த வருவாய் வரவுகளில் செலுத்தப்பட்ட வட்டித் தொகை | 11.56% | 11.05% | 10.25% | 10.57% | 10.99% | 11.46% | 11.20% | 10.80% |
| வருவாய் உபரி(+) / பற்றாக்குறை (–) | **267.01** | **1,364.10** | **1350.11** | **451.53** | **3105.26** | **664.06** | **1,591.39** | **2,988.99** |
| மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (–)% | 0.37% | 1.60% | 1.37% | 0.44% | 2.71% | 0.56% | 1.16% | 1.90% |
| நிதி உபரி(+) / பற்றாக்குறை(–)யில் வருவாய் உபரி(+) / பற்றாக்குறை (–)% | -1.85% | -7.90% | -8.00% | -2.27% | -14.00% | -2.89% | -6% | -11% |
| நிதி உபரி(+) / பற்றாக்குறை(–) | **-14,466.29** | **-17,274.07** | **-17,909.12** | **-19,889.30** | **-22,379.23** | **-22,938.57** | **-25,289.52** | **-27,774.06** |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதி உபரி(+) / பற்றாக்குறை(–) % | -2.96% | -2.97% | -2.74% | -2.88% | -2.88% | -2.84% | -2.78% | -2.71% |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பு(GSDP) | **4,87,996.00** | **5,81,635.00** | **6,54,340.00** | **6,90,542.00** | **7,76,859.75** | **8,08,766.00** | **9,09,861.75** | **10,23,594.47** |